பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

**Kalaikkathir**

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 04 திங்கட்கிழமை 21.10.2024 கதிர் 348

## இது ரகசியம் அல்ல!

முன்னாள்ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் சீனி வரி மோசடி தொடர்பான விசாரணைகள் மீண்டும் ☞2

## 400 முறைப்பாடுகள்

நாடாளுமன்ற தேர்தல் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை 400ஐ தாண்டியுள்ளது.

கடந்ததினத்தில்ஆணைக்குழுவிற்கு58 முறைப்பாடுகள்கிடைக்கப்பெற்றுள் ☞2

## போலி முகநூல்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட உத்தியோகபூர்வமற்ற முகநூல் பக்கம் தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக விமான ☞2

## வெளிநாட்டவர் இருவர் நாடு கடத்தப்பட்டனர்

சனிக்கிழமை இரவு, கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இரு வெளிநாட்டவர்கள் குடிவரவு அதிகாரிகளிடம் இலங்கைக்கு வந்ததன் நோக்கத்தை தெளிவாக வெளிப்படுத்தத் தவறியதை அடுத்து நாடு கடத்தப்பட்டனர். அவர்கள் வந்த அதே விமானத்தில் திருப்பி அனுப்பப்பட்டனர்.

சந்தேகத்திற்கிடமான இந்த இரு வெளிநாட்டவர்களும்தோற்றத்தில் ☞2

# இனவாதம் ஒன்று மட்டுமே தமிழ் கட்சிகளின் மூலதனம்

## 76 வருடங்களாக வாக்களித்து என்ன பயன்? என்று கேட்கிறார் ஜேவிபியின் சந்திரசேகரம்

தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்களிடம் இனவாதம் பேசி அவர்களைச் சூடேற்றி வாக்கைப்பெறுப்பார்க்கின்றனர். இனிமேலும் அவர்களுடைய பேச்சைக் கேட்க மக்கள் தயாராக இல்லை.76 வருடங்களாக தமிழ் கட்சிகளுக்கு வாக்களித்து தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழ்கின்றனரா? மக்களுடைய வாழ்க்கையை மாற்றுகின்ற வேலைத்திட்டம் தமிழ்க் கட்சிகளிடம் கிடையாது. இனவாதம் ஒன்றே அவர்களின் ஒரே மூலதனம் என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான இ.சந்திரசேகரம் தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை சாவகச்சேரி நகரில் தேசிய மக்கள் சக்தி அலுவலகம் திறந்து வைக்கப்பட்ட நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்திருந்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க எடுக்கும் நடவடிக்கைகளை வெற்றி ☞2

## இன அடையாளத்தை இழக்கும் மாற்றத்துக்கு துணைபோகாதீர்

### தமிழ் இளையோரிடம் சிறீதரன் கோரிக்கை

தமிழ் இன அடையாளத்தை இழக்கும்எந்தமாற்றங்களுக்கும்தமிழ் இளையோர் துணைபோகக்கூடாது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். தேர்தல் மாவட்ட வேட்பாளருமான சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சிநகரவட்டாரசமூகமட்ட அமைப்புகளின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம்நடைபெற்றமக்கள்சந்திப்பில் கலந்துகொண்டுஉரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:



தமிழ்த் தேசியம் மட்டும் ஈழத் ☞2

## இனத்துக்குத் துரோகம் இழைக்கவே மட்டக்களப்பில் சுயேச்சைகள் போட்டி

### வேட்பாளர் கருணாகரம் தெரிவிப்பு

தமிழினத்துக்கு துரோகம் இழைப்பதற்காகவே மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை பல சுயேச்சைகள் போட்டியிடுகின்றார்கள் என்று ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் முதன்மை வேட்பாளர் கருணாகரம் (ஜனா) தெரிவித்துளார்.

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு நேற்று மட்டக்களப்பு அமெரிக்கன் மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத் தேர்தலானது வடக்கு கிழக்குக்கு ஒரு முக்கியமான தேர்தலாக காணப்படுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்திலே பலசுயேச்சை குழுக்கள் இம்முறை களமிறங்கப்பட்டுள்ளன. அவர்கள் பல ஆயிரக்கணக்கான நிதியை செலவிட்டு அரசியல் செய்கின்றனர். இது யாருக்காக? இதில் பல சுயேச்சை குழுக்கள் தமிழர்களின் வாக்குகளை பிரித்து மாற்றினத்தவருக்கு ஆசனங்களைப்பெற ☞2

## விலை போகாத தமிழ் அரசுக்கே பட்டிருப்பு மக்களின் வாக்குகள்

### இப்படிச் சொல்கிறார் சிறிநேசன்

தமிழர்களாகிய நாம் விலை போகாத தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்களிக்க இருப்பதாக களுவாஞ்சிக்குடி பிரதேச மக்கள் என்னிடம் நேரில் தெரிவித்தார்கள் என்று இலங்கைதமிழ் அரசுக்கட்சியின்சார்பில் ☞2

## தமிழ் மக்கள் வீடு சின்னத்துக்கே நிச்சயமாக வாக்களிக்கவேண்டும்

### பொது வேட்பாளர் அரியநேத்திரன் கோரிக்கை
### சங்கு கூட்டுடன் சம்பந்தமில்லை எனவும் அறிவிப்பு

தமிழ் மக்கள் இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு வீடு சின்னத்துக்கு நிச்சயமாக வாக்களிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதித் தேர்தல் பொது வேட்பாளரான அரியநேத்திரன் கேட்டுள்ளார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் சிறிநேசனுக்காகமட்டக்களப்புமாவட்டம் பாட்டிருப்பு தேர்தல் தொகுதிக்குட்பட்ட களுவாஞ்சிக்குடிநகர்ப்பகுதியில் ☞2

## முறைகேடாகச் சேர்த்த சொத்துக்களை பறிமுதல் செய்ய புதிய அரச நிறுவனம்

### அமைக்கத் திட்டமிடுகிறது அரசு

முறைகேடாக சொத்து சேர்த்தவர்களின் சொத்துகளை பறிமுதல் செய்து கையகப்படுத்த புதிய அரச செயலணி ஒன்றை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

இது'சொத்துக்கள் மறுசீரமைப்பு நிறுவனம்' அல்லது அத்தகைய பெயர் ஒன்றால் அழைக்கப்படும்.

முறைகேடாக அல்லது பணமோசடிமூலம்சம்பாதித்த ☞2

## பொதுத் தேர்தலின் பின்பும் ஹரினியே பிரதமர்

### அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

பொதுத் தேர்தலுக்குப் பின்னர் அமையஇருக்கும்அமைச்சரவையிலும் ஹரினி அமரசூரியவே பிரதமராக இருப்பார் என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு நேற்றையதினம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் எமது மூன்று மாதங்களுக்கான வரவு,செலவுத்திட்டம் முன்வைக்கப் படவுள்ளது. குறுகியகாலத்துக்கான செலவீனங்களை முன்வைப்பதே இதன் நோக்கமாகும்.

அதேநேரம் அடுத்த ஆண்டு நாம் முழுமையான வரவு செலவுத் திட்டத்தினை முன்வைப்போம். அந்த வரவு செலவுத் திட்டத்தில் எமது கொள்கையுடன் நீண்டகாலத்திட்டமும் நிதிதிட்டமும் உள்ளடக்கப்பட்டு சேர்ந்து இணையும் நிலை ஏற்படும்.

புதிய அமைச்சரவை 25 அங்கத் தவர்களுடன் முன்னெடுக்கப்படும். அந்த அமைச்சரவை புதிய முக்கிய தீர்மானங்களை எடுக்கவுள்ளது. அந்த அமைச்சரவையிலும் பிரதமாக கலாநிதி. ஹரிணி அமரசூரியவே இருப்பார் என்றார்.

## இலஞ்ச ஊழல் அற்ற நபர்களுக்கே தமிழர்கள் வாக்களிக்கவேண்டும்

### மன்னார் ஆயர் அறிக்கை

உரிமை மறுப்புக்கு இலக் கான சிறுபான்மை மக்களாகிய நாம் நமது அனைத்து வகையான உரிமைகளையும் பெறுவதற்குரிய ஆகக்கூடிய வழிமுறை அரசியல்தான். எனவே இந்தத் தேர்தலில் இலஞ்ச ஊழலற்ற செயல்திறன் வாய்ந்த சொல்லுக்கும் செயலுக்கும் ஒத்திசைவுள்ள நபர்களுக்கே நாம் வாக்களிக்கவேண்டும் என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் (2024) தொடர்பாக மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை விடுத்திருக்கும் அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை மக்களாகிய நாம் மீண்டுமொரு தேர்தலை எதிர்நோக்கி நிற்கின்றோம். ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு இப்போது நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளவிருக்கிறோம்.

நாடாளுமன்றத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கோட்டாபய ராஜபக்சவின் அப்போதைய செயலாளர்களின் கைத்தொலைபேசி மற்றும் லேண்ட்லைன் இலக்கங்கள் தற்போது அதே பிரிவினரால் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருவதாக சிங்கள வாரப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீனிக்கான வரியை அரசு அதிகரிப்பதற்கு முன்பாக அதனை அறிந்துகொண்ட மொத்த வர்த்தகர்கள் சிலர் பெருமளவில் சீனியை இறக்குமதி செய்துள்ளனர். அவர்களின் பொருட்கள் இலங்கை துறைமுகத்திலிருந்து வெளியே வந்தடைந்த ஒரு சில நாட்களின் பின்னர் வரி அதிகரிக்கப்பட்டது. இதனால் அந்த வர்த்தகர்கள் மிகப் பெரிய இலாபத்தை அடைந்தனர். வரி மூலம் அரசுக்குக் கிடைக்கவேண்டிய பல ஆயிரம் கோடி ரூபாய் வரிவருமானம் இழக்கப்பட்டது. இந்த மோசடி ஆளும்தரப்பினரின் ஆதரவுடன் இடம்பெற்றதா என்பது குறித்தே விசாரிக்கப்படவுள்ளது.

...................

பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராக அதன் முன்னாள் நிர்வாகியான செல்வின் நியமிக்கப்படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதற்கு சபையின் ஒன்றிணைந்த ஊழியர் சங்கத்திடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இது தொடர்பில் துறைசார் அமைச்சரான விஜித ஹேரத்துக்கு சங்கம் கடிதம் எழுதியுள்ளது. எதற்கும் ஒன்றுக்கு இரண்டு முறை உங்கள் நியமனம் குறித்துச் சிந்தியுங்கள் என்று அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. செல்வின் மீது ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் இருப்பதாகவும் சங்கம் தெரிவித்துள்ளது.

கணக்காய்வு விசாரணைகளில் அவர் மீதான குற்றச்சாட்டுகள் நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் சங்கம் குறிப்பிடுகிறது. அவர் சபையின் நிர்வாக இயக்குநராக இருந்த 2015- முதல் 2019 வரையான காலகட்டத்தில் ஜவ்வரிசி இயந்திரம் வாங்கியதில் இரண்டு கோடிக்கு மேல் முறைகேடுகள் நடந்துள்ளதாக ஊழியர் சங்கம் அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளது.

இந்த எதிர்ப்புக்குப் பின்னரும் செல்வினை அமைச்சர் நியமிப்பாரா அல்லது அவர் மீதான ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதைப் பார்ப்பதற்கு பனை அபிவிருத்திச் சபை காத்திருக்கின்றது.

.................................

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் அளவுக்கு மீறி வழங்கப்படுவதை தடுப்பதில் ஜனாதிபதி தரப்பு அக்கறையோடு இருக்கிறது. சட்டத்தின்படி வழங்கப்படும் சலுகைகளுக்கு மேலாக எந்தவொரு சலுகையும் தேவையற்றது என்பதே ஆளும்தரப்பின் நிலைப்பாடு.

இதன் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட மேலதிக பாதுகாப்பு வசதிகள் முதற்கட்டமாகக் குறைக்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மேலதிக பாதுகாப்பு வாகனங்களை திரும்ப ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்த உத்தரவுக்கு அமைய முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்சவுக்கு வழங்கப்பட்ட 6 உத்தியோகபூர்வ வாகனங்களில் அம்பியூலன்ஸ் உட்பட மூன்று உத்தியோகபூர்வ வாகனங்கள் இன்று ஜனாதிபதி செயலகத்தில் கையளிக்கப்படவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஆளும் தரப்பின் இந்த நடவடிக்கைக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதிகள் 6 பேரும் இணைந்து செயற்படுவது என்று முடிவு செய்துள்ளார்கள் என்று சிங்களப் பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருந்தது. அதற்குப் பதிலளித்த அமைச்சர் விஜித ஹேரத், நல்லது நல்லது அவர்கள் சங்கம் அமைத்து போராட்டம் நடத்தட்டும் என்ற வகையில் நக்கலடித்துள்ளார்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## இனவாதம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெறச்செய்ய வேண்டுமானால் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் இருந்தும் தேசிய மக்கள் சக்தி சார்பாக போட்டியிடுபவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும்.

யாழ்பாணத்தில் தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்கப் பல இளைஞர்கள் தயாராக உள்ளனர். எம்மோடு அணி திரண்டு வருகின்றனர். தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்க் கட்சிகளுக்கு வயிற்றுக் குடைச்சல் ஏற்பட்டுவிட்டது. அவர்கள் மக்களிடம் இனவாதம் பேசி மக்களை சூடேற்றி வாக்கைப் பெறப்பார்க்கின்றனர்.

இனிமேலும் அவர்களுடைய பேச்சைக் கேட்க மக்கள் தயாராக இல்லை.76 வருடங்களாக தமிழ் கட்சிகளுக்கு வாக்களித்து தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழ்கின்றனரா?

மக்களுடைய வாழ்க்கையை மாற்றுகின்ற வேலைத் திட்டம் தமிழ்க் கட்சிகளிடம் கிடையாது. இனவாதம் ஒன்றே அவர்களின் ஒரே மூலதனம் உலகம் எங்கோ போய்விட்டது. ஆனால் நாம் எங்கோ நிற்கிறோம்.

தமிழ் கட்சிகள் பிளவடைந்து நிற்கின்றபோதிலும் தமிழர்களின் மானம் காக்க தமிழருக்கு வாக்களியுங்கள் என்கின்றனர். மக்களை தடுமாறச் செய்பவையாகவே தமிழ்க் கட்சிகள் காணப்படுகின்றன.

அதேசமயம் முன்னாள் அமைச்சர் ஒருவர் மண் கடத்தல் செய்து, கடலை கொள்ளையடித்து யார் ஆட்சிக்கு வந்தாலும் தான் அமைச்சராகிவிடலாம் என்ற கனவில் உள்ளார். முன்னை நாள் அமைச்சரே மன்னித்துக்கொள்ளுங்கள் தேசிய மக்கள் சக்தி நாட்டை நாசம் செய்தவர்களுக்குத் துணைபோனவர்களை ஒருபோதும் தம்முடன் இணைத்துக்கொள்ளாது - என்றார்.

## விலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு தேர்தல் தொகுதிக்குட்பட்ட களுவாஞ்சிக்குடியில் நேற்று தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்ட அவர்கள், அங்கு செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தனர். அவர்கள் மேலும் தெரிவித்தததாவது:

தமிழர்களாகிய நாம் விலை போகாத தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்களிக்க இருப்பதாக களுவாஞ்சிக்குடி பிரதேச மக்கள் என்னிடம் நேரில் தெரிவித்தார்கள். இந்நிலையில் இந்த பொதுத் தேர்தலில் பல்வேறுபட்டோர், பல்வேறு நோக்கங்களுக்காகவும், சுய நோக்கங்களுக்காகவும், களமிறக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் மக்கள் தமிழ் அரசுக் கட்சிக்கு வாக்களிக்கவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எமது கட்சி மூன்று அல்லது நான்கு ஆசனங்களைப் பெறவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு. மக்கள் இந்த விதத்தில் மிகவும் நியாயமாக சிந்தித்து தேர்தலில் வாக்களிக்கவேண்டும். மக்கள் இந்தத் தேர்தலில் சரியாக சிந்தித்து சரியான நபர்களை தெரிவு செய்ய வேண்டும்.

அதனால் நவம்பர் 14 எனது தமிழ் அரசு கட்சி வெற்றி பெற்றுள்ளது என்பதை நாம் கேட்க வேண்டும். எனவே மக்கள் வீடு சின்னத்துக்கும் எனது 6ஆம் இலக்கத்துக்கும் வாக்களிப்பதோடு மக்கள் விரும்பும் ஏனைய இரு வேட்பாளர்களுக்கும் தமது வாக்குகளை செலுத்த முடியும்.

விசமத்தனமான செய்திகளை பரப்பக்கூடிய விதத்தில் சிலர் செயற்படுகின்றார்கள். அவையெல்லாம் அழுக்காறு, காழ்ப்புணர்ச்சி காரணமாக செய்யப்படுகின்ற செயற்பாடுகளாய் இருக்கும். அவற்றை நாம் உதறித் தள்ளிவிட்டு ஊழல், மோசடி, இலஞ்சம், கையூட்டல், இல்லாமல் அரசியல் செய்யக் கூடியவர்களையும் மக்களுக்கு சரியாக வழிகாட்டக்கூடிய வேட்பாளர்களையும் மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

அதன் அடிப்படையில் கடந்த காலத்தில் எமது பணிகள் சகல மக்களையும் பிரதேசங்களையும் மையமாகக்கொண்டுதான் எமது செயற்பாடுகள் நடைபெற்றன. அதற்கான ஆதாரங்களை இப்போது மக்கள் வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

எனவே நான் மீண்டும் தெரிவு செய்யப்படுகின்றபோது தமிழ் மக்கள் வாழ்கின்ற அனைத்துக் கிராமங்களுக்கும் எங்களுடைய உண்மையான, நேர்மையான பணிகளை மேற்கொள்வேன் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேர்தல் முடிந்த பின்னர் ஆளும் கட்சி எதுவாக இருந்தாலும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில், இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாகவும், இன்னும் பல முக்கியமான பிரச்சினைகள் தொடர்பாகவும், பேசவேண்டிய அவசியம் தமிழ் அரசு கட்சிக்கு நிச்சயமாக இருக்கின்றது.

உண்மையில் பேசித்தான் ஆக வேண்டும். பேசுகின்றபோது அவர்கள் எவ்வாறு நடந்துகொள்ளப் போகின்றார்கள் என்பதுதான் எங்களுடைய எதிர்பார்ப்பாக இருக்கிறது. நீண்டகாலமாக 75 ஆண்டுகளுக்கு மேலாக புரையோடிப் போயிருக்கின்ற இனப் பிரச்சினைக்கான தீர்வினை நாங்கள் பெறுவதற்காக அனைத்து கைங்கரியங்களையும் பேச்சுக்களையும் மேற்கொள்வோம் என்றார்.

## போலி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையம் தெரிவித்துள்ளது.

அந்த இணையத்தில் உரிமையாளர்கள் இல்லாத லக்கேஜ்கள் விற்பனைக்கு உள்ளதாக பொய்யான தகவல் வெளியிடப் பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

பல்வேறு பொருட்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களுடன் கூடிய அந்த சூட்கேஸின் விலை 639 ரூபாய் எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எந்தவொரு வகையிலும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக பயணப் பொருட்களை விற்பனை செய்யப்படுவதில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இதுபோன்ற மோசடிகளில் சிக்கிக்கொள்ள வேண்டாம் என்று பொதுமக்களிடம் கட்டுநாயக்கா விமான நிலைய நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

## இனத்துக்குத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்ற காரணத்தினால் திட்டமிட்டு இறக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வரலாற்றில் ஒரு தேசியக் கட்சியில் முதன் முறையாக ஒரு சிங்கள இனத்தவர் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலிலே களமிறக்கப்பட்டுள்ளார். இதன் பின்னணிகளை நோக்கும்போது சுயேச்சைகள் தாங்கள் வாக்கெடுக்காவிட்டாலும் பரவாயில்லை தமிழினத்துக்கு துரோகம் இழைப்பதற்காகவே அவர்கள் இம்முறை போட்டியிடுகின்றார்கள்.

மாவட்டத்திலுள்ள மக்கள் எமது கட்சிக்கு முழு ஆதரவினை தந்து இம்முறை தேர்தலில் அனைவரும் இணைந்து வழங்கவேண்டும் என்றார்.

## இன ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களுக்கான அடையாளம். அத்தகைய அடையாளத்தை நிரந்தரமாக பேணும் வகையிலான அரசியல் செல்நெறிகளின் மூலம் இனத்தின் இறைமையை மீட்கும் என் அரசியல் பணியும் பயணமும் தொடரும்.

எங்கள் அடையாளங்களை இழக்கத் துணியும் எந்த மாற்றங்களுக்கும் எமது இளைய தலைமுறையினர் உட்பட்டுவிடக்கூடாது என்றார்.

## தமிழ் மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று தேர்தல் பரப்புகள் இடம்பெற்றன. இதில் அரியநேத்திரனும் கலந்துகொண்டார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரமல்ல, வட கிழக்கு மாகாணத்தில் இருக்கின்ற மக்களுக்கு நாம் தெரிவித்துக்கொள்வது யாதெனில், இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு வீடு சின்னத்துக்கு நிச்சயமாக வாக்களிக்க வேண்டும்.

மட்டக்களப்பை பொறுத்தவரையில் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த எமது கட்சியை சேர்ந்த மூத்த உறுப்பினரான ஞானமுத்து சிறிநேசன் அவர்களுக்காக நாம் பிரசாரப் பணியில் ஈடுபட்டு வருகின்றோம். அவருக்காக வீடு சின்னத்துக்கும் ஆறாம் இலக்கத்துக்கும் மக்கள் வாக்களிக்க வேண்டும். அதேவேளை ஏனைய இரு வேட்பாளர்களுக்கும் மக்கள் வாக்களிக்கலாம்.

ஒரு சிரேஷ்ட உறுப்பினர் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படுகின்றபோது அபிவிருத்திகள் மாத்திரமின்றி தமிழ் தேசிய அரசியலை மேற்கொண்டு செல்வதற்கான ஒரு வாய்ப்பாகவும் இருக்கும் என்கின்ற காரணத்தினால் நாம் அவருக்காக பரப்புரை செய்துவருகின்றோம். ஒரு கல்விமானாகவும், இலங்கை தமிழ் கட்சியிலே மூத்த உறுப்பினராகவும், கட்சியின் மத்திய குழு உறுப்பினராகவும் இருந்து அவர் செயற்பட்டு வருகிறார்.

சங்கு சின்னம் என்பது எனக்கு எழுதித் தரப்பட்ட சின்னமல்ல. அது ஒரு சுயேச்சையின் சின்னமாகும். இலங்கை அரசியல் யாப்பில் தேர்தல் சட்டத்தின்படி, சுயேச்சைக் குழுவில் யாரும் போட்டியிடலாம். அதில் நூற்றுக்கு மேற்பட்ட சின்னங்கள் வெளியிடுவார்கள். அதில் வருகின்ற ஒரு சின்னத்தை குறிப்பிட்ட குழுவுக்கு வழங்குவார்கள். இது வழக்கம்.

அந்த அடிப்படையில் நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது நான் விரும்பிய சங்கு சின்னத்தை பெற்றுக்கொண்டேன். அப்போது முப்பது நாட்களுக்கு மாத்திரம்தான் சங்கு சின்னத்தை நான் பாவிப்பதற்கு தேர்தல் ஆணையம் எனக்கு அனுமதி வழங்கியிருந்தது.

அந்த சின்னத்தை பயன்படுத்தி பரிபூரணமாக தமிழ் பொது வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் 83 சிவில் அமைப்புகளும் தமிழ் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து என்னை களமிறக்கியதனால் நான் கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டேன்.

நான் அந்த ஏழு கட்சிகளிலோ, 83 சிவில் அமைப்புகளிலோ அங்கத்துவம் வகிக்கவில்லை. நான் இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஆயுட்கால உறுப்பினர். இன்றும் இலங்கை தமிழ் அரசு கட்சியிலேதான் இருந்துகொண்டிருக்கிறேன்.

நான் சங்கு சின்னத்தை ஜனாதிபதித் தேர்தலுக்காக பாவித்தது உண்மை. பின்னர் அந்த சின்னத்தை யார் எடுக்கிறார்கள், எவ்வாறு எடுப்பது என்பது தொடர்பில் தேர்தல் சட்டதிட்டங்கள் உள்ளன. சுயேச்சைக் குழுவாக யார் தேர்தல்களில் போட்டியிட்டாலும் அல்லது அரசியல் கட்சிகள் போட்டியிட்டாலும் சின்னங்களை கோருவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு.

அதன்பின்னர் அந்தச் சின்னத்தை ஒரு கட்சி கோருமாக இருந்தால் அவர்களுக்கு அவர்கள் கேட்கின்ற சின்னத்தை வழங்குவார்கள். இரண்டுக்கும் மேற்பட்ட கட்சிகள் ஒரு சின்னத்தை கோருவார்களாக இருந்தால் திருவுளச்சீட்டு மூலம் அந்தச் சின்னத்தை தேர்தல் ஆணையம் வழங்கும்.

ஆகவே, சங்கு சின்னத்தை இப்போது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்கின்ற அமைப்பு பெற்றுள்ளது. அதற்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றார்.

## முறைகேடாகச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் வெளியிடப்படாத சொத்துக்களையும் பணத்தையும் கண்டறிந்து அதற்கான சட்டத்தின் மூலம் அவற்றைப் பறிமுதல் செய்து அரசுடமையாக்கும் வகையில் இந்தப் புதிய நிறுவனம் உருவாக்கப்படவுள்ளது.

கறுப்புப் பணம் வைத்திருப்பவர்கள் குறித்து ஆளும்தரப்புக்கு ஏற்கனவே கிடைத்த தகவலின் அடிப்படையில், பல இரகசிய விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் கண்டறியப்படும் சட்டவிரோத சொத்துக்கள் மற்றும் பணத்தை அரசுடமையாக்கும் நோக்கத்துடன் புதிய நிறுவனம் செயற்படுத்தப்படவுள்ளது.

## 400 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளதாகவும் இதுவரை கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 401 ஆக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாடுகள் அனைத்தும் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பானவை என்றும் வன்முறை தொடர்பான முறைப்பாடுகள் எதுவும் இதுவரை பதிவாகவில்லை என்றும் தேர்தல் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

கிடைக்கப்பெற்ற 401 முறைப்பாடுகளில் 309 முறைப்பாடுகளுக்கு ஏற்கனவே தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீனர்களைப் போன்று இருந்தாலும் அவர்களிடம் சீனக் கடவுச்சீட்டுகளுக்கு மேலதிகமாக கம்போடிய மற்றும் துருக்கிய கடவுச்சீட்டுகளும் இருந்தன.

சீனக் கடவுச் சீட்டில் சீனாவில் உள்ள ஒரு கிராமத்தின் பெயரே அவர்கள் பிறந்த இடமாக அந்த கடவுச்சீட்டுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தன. சீனச் சட்டத்தின்படி, அந்நாட்டு குடிமக்கள் இரட்டைக் குடியுரிமை வைத்திருக்க முடியாது,

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பிக்காமல் இருப்பது பெரும் பிரச்சினை

## சுசில் பிரேமஜயந்த எச்சரிக்கை



அரசாங்கம்அடுத்தவருடத்துக்கான வரவு செலவு திட்ட அறிக்கையை சமர்ப்பிக்காமல் இருப்பது பாரிய பிரச்சினையாகும். ஏனெனில், அடுத்த வருடத்துக்கான வருமான இலக்குகளை அடிப்படையாகக் கொண்டேசெலவுகளைதிட்டமிடமுடியும்.இடைக்கால கணக்கு வாக்கெடுப்பை அனுமதித்துக்கொள்வதன் மூலம் அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி ஒதுக்க முடியாது. வருமான வழிகளையும் திட்டமிட முடியாது என முன்னாள் அமைச்சரும் புதிய ஜனநாயக முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

புதிய ஜனநாயக முன்னணி கொழும்பில் ஞாயிற்றுக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி 19 மாவட்டங்களில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடுவதுடன் 3 மாவட்டங்களில் எமது பங்காளி கட்சியான ஐக்கிய தேசியகட்சியின்யானைசின்னத்தில்போட்டியிடுகிறது. கடந்த ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு 23 லட்சம் வாக்குகள் கிடைக்கப்பெற்றன.

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு 55 இலட்சம் வாக்குகள் கிடைக்கப் பெற்றன. அடுத்தபடியாக சஜித் பிரேமதாசவுக்கு 44 லட்சம் வாக்குகள் கிடைக்கப்பெற்றன. ஆனால், யாருக்கும் 50 வீதத்துக்கு அதிக வாக்கு கிடைக் கவில்லை. அதனால் 57 வீத வாக்குகள் தற்போதைய ஜனாதிபதிக்கு எதிராகவே அளிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதிதேர்தலில்கட்சிகளுக்குகிடைக்கப்பெற்ற பெறுபேறுகளின் மூலம் எந்த கட்சிக்கும் நாடாளுமன்றத்தில் 113 ஆசனங்கள் கிடைப்பதில்லை. அதேநேரம் ஜனாதிபதி தேர்தலில் கிடைக்கப்பெற்றது போன்று நாடாளுமன்ற தேர்தலில் அந்த வாக்குகள் அவ்வாறே கிடைக்கும் எனத் தெரிவிக்க முடியாது.

கட்சிகளின் அடிப்படையில் வாக்குகள் பிரிந்து செல்லும். அதனால் தேசிய ஐக்கிய முன்னணிக்கு நிறைவேற்று அதிகாரத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு நாட்டை ஆட்சி செய்ய முடியாது. நாடாளுமன்ற அதிகாரமும் தேவையாகும். நா.ஜூளுமன்ற அதிகாரத்தை எவ்வாறான முறையில் மக்கள் வழங்குவார்கள் என்பது அவர்களின் நடவடிக்கைகளிலேயே தங்கி இருக்கிறது.

தேர்தல் பிரசார மேடைகளில் அவர்கள் தெரிவித்த விடயங்களுக்கு மாற்றமான நடவடிக்கையே தற்போது இடம்பெறுகிறது. குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாடு, அரச ஊழியர்களின் சம்பள உயர்வு, பொருள்களின் விலை அதிகரிப்பு போன்ற விடயங்கள் அவர்கள் தெரிவித்துவந்த வாக்குறுதிக்கு மாற்றமாகவே இருக்கின்றன.

அதேபோன்று இந்த அரசாங்கம் அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்ட அறிக்கையை சமர்ப்பிக்காமல் இடைக்கான கணக்கு வாக்கெடுப்பொன்றை அனுமதித்துக்கொள்ளப்போவதாக தெரிவித்திருக்கிறது.

நாடாளுமன்ற தேர்தல் நவம்பர் 14 ஆம் திகதி இடம்பெற்று 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தை கூட்டுவதாக தெரிவித்துள்ள நிலையில், டிசெம்பர் முதல் வாரத்துக்குள் அமைச்சரவையை அமைத்து, வரவு செலவு திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு காலம் போதுமானதாகும்.

இடைக்கால கணக்கு வாக்கெடுப்பை அனுமதித்துக்கொள்வதன் மூலம் அரசாங்கத்தின் மீண்டெழும் செலவுகளுக்கு மாத்திரமே நிதி ஒதுக்க முடியும். அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி ஒதுக்க முடியாது. வரி செலுத்துபவர்களும் பாதிக்கப்படுவார்கள்.

அதனால் அரசாங்கம் அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்ட அறிக்கையை சமர்ப்பிக்காமல் இருப்பது பாரிய பிரச்சினைக்கு வழிவகுக்கும்.

அடுத்த வருடத்துக்கான வருமான இலக்குகளை அடிப்படையாகக் கொண்டே செலவுகள் திட்டமிட முடியும். அதேபோன்று சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடுகளுக்கமைய எமது மொத்த தேசிய உற்பத்தியை அதிகரித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த விடயங்கள் அனைத்தையும் வரவு - செலவு திட்டத்தின் மூலமே திட்டமிட முடியும். - என்றார்.(05)

# முடங்கியுள்ள 400 கோப்புகளை மீண்டும் திறக்க அநுர உத்தரவு

## திருடர்களை பிடிக்கும்போது எவரும் சிணுங்காதீர்கள் என்கிறார்



கடந்த காலங்களில் 400 இற்கு மேற்பட்ட கோப்புகள் விசாரணைகள் மேற்கொள்ளப்படாமல் முடங்கிப்போயுள்ளன. அனைத்துக்கோப்புக்களையும் மீண்டும் திறந்து படிப்படியாக வழக்கு தொடர அவசியமான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியிருக்கிறோம்.திருடர்களை பிடிக்கும்போது எவரும் சிணுங்காதீர்கள் என ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தலுக்கான தேசிய மக்கள் சக்தியின் முதலாவது பரப்புரை கூட்டம் தங்காலையில் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான அநுரகுமார திசாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு உரையாற்றினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் -

ஒரு சிலர் இப்பொழுது கேட்கிறார்கள் திருடர்களை பிடித்துவிட்டீர்களா என்று. ஆனால் நான் ஒன்றைக் கூறுகிறேன்பிடிக்கும்போதுசிணுங்கவேண்டாம்.400 இற்கும் மேற்பட்ட கோப்புகள் இருக்கின்றன.

அவை மூடப்பட்டு இருக்கின்றன. நாங்கள் பரிசீலித்துப் பார்த்தோம்.ஒருசில கோப்புகள் சட்டமா அதிபர் திணைக்களத்தில்முடங்கிபோயுள்ளன.

மேலும் சில கோப்புகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் இறுகிப்போயுள்ளன. இன்னும் சில கோப்புகள் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் குவிந்து இருக்கின்றன.

அனைத்துக் கோப்புக்களையும் மீண்டும் திறந்து படிப்படியாக வழக்கு தொடரஅவசியமானவிசாரணைகளை மேற்கொள்ளுமாறு நாங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியிருக்கிறோம்.

நாங்கள் காட்சிக்காக வேலை செய்பவர்கள் அல்லர். 2015 இல் முழுமையாகவே மோசடிப்பேர்வழிகளுக்கும் ஊழல்பேர்வழிகளுக்கும் எதிராக காட்சிக்கான வேலைத்திட்டமொன்று அமுலாக்கப்பட்டது.

இலஞ்ச ஆணைக்குழுவுக்கு கோப்புக்களை எடுத்துச்செல்வார்கள். வெளியில்வந்து ஊடங்களுக்கு கருத்து சொல்லுவார்கள்.

தேசிய மக்கள் சக்தி அப்படியல்ல. மிகவும் திட்டமிட்ட வகையில் எல்லா தரவுகளையும் சேகரித்து முறைப்படி நீதிமன்றத்தால் தண்டனை வழங்கத்தக்க வகையில் வழக்குகளை தாக்கல் செய்வதற்கு அவசியமான அறிவுறுத்தல்களை நாங்கள் வழங்கியிருக்கிறோம். எவருமே பதற்றமடைய வேண்டாம்.

இந்த நாட்டு மக்களிடம் அதுபற்றிய ஓர் எதிர்பார்ப்பு நிலவியது. அதோ அந்த மோசடியாளர்களுக்கும் ஊழவாதிகளுக்கும் தண்டனை வழங்குகின்ற எதிர்பார்ப்பை நிறைவேற்றுகின்ற அரசாங்கம்தான் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம். நாங்கள் அதனை சாதிப்போம். அத்தோடு நின்றுவிட மாட்டோம். - என்றார்.(05)

# நுவரெலியாவில் முகப்புத்தக களியாட்டம்; போதைப் பொருள்களுடன் 30 பேர் கைது

*நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா கிரகறி வாவி கரையோரத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் நடைபெற்ற முகப்புத்தக களியாட்டநிகழ்வொன்றுசுற்றிவளைக்கப்பட்டதில்போதைப்பொருள்களுடன் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இச்சம்பவம் சனிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர் .*

*நுவரெலியா பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் போதைப்பொருள்களுடன் முகப்புத்தக(பேஸ்புக்)களியாட்ட நிகழ்வொன்று நடைபெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*இதன்போது 6 கிராம் 90 மில்லி கிராம் கேரள கஞ்சா, 12 போதை மாத்திரைகள், 1380 மில்லி கிராம் குஷ் போதைப்பொருள், 400 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், 150 மில்லி கிராம் கொக்கைன் போதைப்பொருள் உட்பட பல்வேறு போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன எனவும் அவற்றை வைத்திருந்த 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்; எனவும் அவர்கள் அனைவரும் ஆண்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.*

*கைதானவர்கள் 20 முதல் 38 வயதுடையவர்கள் எனவும் அவர்கள் அனைவரும் வெளி பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.*

*சந்தேக நபர்கள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை)நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.*

*இது தொடர்பில் நுவரெலியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.*

*(05)*

# போலி நாணயத்தாள்களுடன் அக்கரைப்பற்றில் மூவர் கைது

அக்கரைபற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலமுனை பகுதியில் காரில் பயணித்த மூவர் போலி நாணயத்தாள்களுடன் அக்கரைப்பற்று பொலிஸாரால் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

அக்கரைப்பற்றுபொலிஸ்விசேடஅதிரடிப்படையின் அதிகாரிகள் குழுவொன்று வீதித்தடை கடமை வேளையில் மேற்கொண்ட சோதனை நடவடிக் கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த சந்தேக நபர்கள் 34, 43 மற்றும் 46 வயதுடைய களுவாஞ்சிக்குடி மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களை சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்நபர்களிடமிருந்து 5000 ரூபா மதிப்புடைய பத்து போலி நாணயத்தாள்கள் மற்றும் கார் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் அக்கரைப்பற்று பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வேட்பாளர் குழப்பங்கள்

நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததும் ஒன்றரை மாத காலத்திற்குள் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

போதிய நிதி இல்லை என்று காரணம்கூறி ரணில் விக்கிரமசிங்கவின் நிதி அமைச்சு உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான நிதியை விடுவிக்காத காரணத்தால் அந்தத் தேர்தலை நடத்த முடியாத நிலை தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஏற்பட்டது. அதனை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை உடனடியாக நடத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதற்கிடையில் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் காரணத்தால் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த முடியாத நிலை ஏற்பட்டது. எனவே பொதுத் தேர்தல் முடிந்ததும் 35 முதல் 40 நாட்களுக்குள் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படும் என்று இப்போது ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஏற்கனவே பெறப்பட்ட தேர்தல் வேட்புமனுக்களின் அடிப்படையிலேயே தேர்தல் நடத்தப்படும் என்றும் ஆணைக்குழு அறிவித்துள்ளது. அப்படித் தேர்தல் நடத்தப்பட்டால் அது மிகப் பெரிய குழப்பமாக அமைவதற்கான சாத்தியங்களே அதிகம் உள்ளன.

முதலாவது வேட்புமனுத் தாக்கல் செய்தவர்களில் கணிசமானஎண்ணிக்கையிலானவர்கள், பொருளாதார நெருக்கடி காரணமாக வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். அதைவிட முக்கியமானது, ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி ஏற்பட்ட அரசியல் அணி மாற்றங்கள் காரணமாக இப்போது யார் எந்தக் கட்சியில் அரசியல் அணியில் இருக்கிறார்கள் என்பதே தெரியவில்லை. உள்ளூராட்சி சபைக்கான வேட்புமனுக்களில் ஒரு கட்சியின் சார்பில் பெயரிடப்பட்டவர்கள் இப்போது எந்தக் கட்சியில், எந்த அணியில் இடம்பெற்றுள்ளார்கள் என்பதும் இப்போது சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படும்போது கட்சி தாவும் அரசியலாளர்களின் கொள்கையின்றி கட்சி மாறும் அரசியல்வாதிகளின் சுயரூபம் வெளிப்படும். அப்படிப் பெரும் எண்ணிக்கையானவர்களின் சுயரூபம் வெளிப்படும் என்பதுதான் இப்போதுள்ள சுவாரஸியம்.

மேற்படி தேர்தல் தொடர்பான நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் அதே வேட்புமனுக்களை எவ்வித மாற்றமும் இன்றிமீண்டும்நடத்தவேண்டும்எனத்தெரிவித்ததேர்தல் ஆணையாளர், அப்போது கட்சி மாறியவர்கள் பற்றியத் தேர்தல் ஆணைக்குழுவுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

அப்படிக் கட்சி மாறியவர்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில்வெற்றிபெற்றால்அவர்களைக்கட்சியிலிருந்து ஒழுக்காற்று நடவடிக்கைகள் மூலம் வெளியேற்றி அதனை தேர்தல் திணைக்களத்திற்கு அறிவித்து அவர்களை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் வேலையை இனி கட்சிகளின் செயலாளர்கள்தான் மேற்கொள்ளவேண்டும்.

இத்தகைய குழப்பங்களை –முதன்மைப்படுத்தி உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்த்து யாரும் நீதிமன்றம் சென்று தடை உத்தரவு வாங்காத வரைக்கும் இந்தக் குழப்பங்களுடனேயேதான் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடக்கப்போகின்றது. மொத்தத்தில் மார்கழி மாதமும் தை மாதமும்கூட தேர்தல் குழறுபடிகளோடுதான் தொடரப்போகின்றது.

### ஜிப்ரால்டார்:

# கடல் கடந்த பிரித்தானிய ஆதிக்கம் தளர்கிறதா ?




பிரித்தானிய ஆதிக்கத்தில் இருந்து ஜிப்ரால்டார் பகுதியை தங்களிடம் ஒப்படைக்கும்படி ஸ்பெயின் காலங்காலமாகக் கோரி வருகிறது. ஜிப்ரால்டார் பிரச்சினை பல ஆண்டுகளாக இரு நாடுகளுக்கும் இடையிலான முக்கிய அரசியல் விவகாரமாக உள்ளது. ஜிப்ரால்டரில் (Gibraltar) கடுமையான எல்லைக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்படும் என தற்போது பிரித்தானியாவை ஸ்பெயின் மிரட்டியுள்ளது.

### சாகோஸ் தீவுகளை கைவிட்ட பிரிட்டன்:

பிரிட்டிஷ்அரசுசாகோஸ்தீவுகளின்கட்டுப்பாட்டை கைவிட்டு, மொரீஷியஸுக்கு இறையாண்மையை ஒப்படைப்பதாக அண்மையில் அறிவித்தது. தற்போது ஜிப்ரால்டார் தளத்தின் கடல் கடந்த பிரித்தானிய ஆதிக்கம் தளர்கிறதா எனும் ஐயமும் எழுந்துள்ளது.

1713 ஆம் ஆண்டு உட்டிரிச் உடன்படிக்கையில் இருந்து பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்து வரும் பிரதேசத்தினை ஆண்டு தோறும் மீண்டும் உறுதிப்படுத்துவது வழக்கமானது. ஆனால் ஸ்பெயினில் பொது மக்கள் ஜிப்ரால்டரின் இறையாண்மை பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகிறது என எண்ணுகின்றனர்.

இப்பிராந்தியத்தில் உள்ளவர்களுக்கு, அமைதியான சகவாழ்வே மிகவும் முக்கியமானது என உள்ளூர் மக்கள் கருதுகின்றனர். ஸ்பானிய வலது மற்றும் தீவிர வலதுசாரிக் கட்சிகள் எப்போதும் பிரிட்டிஷ் இறையாண்மையை அங்கீகரிப்பதாகக் கருதப்படும் சம்பிரதாயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது வழமை.

உள்ளது.

ஜிப்ரால்டாருக்கான பிரெக்சிட்க்கு பிந்தைய ஒப்பந்தத்தை பிரித்தானியா ஏற்காவிட்டால், கடுமையான எல்லைக் கட்டுப்பாட்டு அமுல் படுத்தப்படுமெனதற்போதுஸ்பெயின்எச்சரித்துள்ளது. ஜிப்ரால்டரில் ஸ்பெயின் படைகள்கூட நிறுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

ஸ்பெயின்வெளியுறவுத்துறைஅமைச்சர்ஜோசே மாணுவல் ஆல்பாரஸ், ஜிப்ரால்டரை அண்டியுள்ள ஆன்டலூசியாவில் செய்தியாளர்களை சந்தித்து, பிரெக்சிட்க்கு பிறகு ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய டிஜிட்டல் எல்லை கட்டுப்பாட்டு முறையை அறிமுகப்படுத்தவதாக ஓர் தகவலை வெளியிட்டார்.

### 1713 உட்டிரிச் உடன்படிக்கை:

ஜிப்ரல்டார் பிராந்தியம் இந்த நீரிணையில் அமைந்துள்ள பிரித்தானியாவின் கடல் கடந்த தளமாகும். இதன் வட எல்லையில் ஸ்பெயின் அமைந்துள்ளது. அத்துடன் ஜிப்ரல்டார் பிரித்தானிய இராணுவத்தின் முக்கியத் தளமாக விளங்கி வந்துள்ளது. தற்போதும் பிரித்தானிய கடற்படையின் தளமொன்று அங்கே அமைந்துள்ளது.

இத்தளத்தின் மூலமாக ஆட்சியுரிமை தொடர்பாக ஸ்பெயினுக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும் இடையே நீண்டகாலமாக கருத்து வேறுபாடு இருக்கிறது.

1713 ஆண்டின் உட்டிரிச் உடன்படிக்கையின்படி ஸ்பெயின் இப்பிரதேசத்தின் ஆட்சியைக் கோருகிறது. எனினும் இங்கு வாழும் மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் ஸ்பெயினுக்கு ஆட்சி கைமாறுவதையோ அல்லது ஸ்பெயினுடனான இணை ஆட்சியையோ விரும்பவில்லை.



### ஜிப்ரால்டார் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்:

ஜிப்ரால்டார் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருப்பது ஸ்பெயினுக்கு பல ஆண்டுகளாக மிக உறுத்தலாகவே உள்ளது. பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறிய பின்னர், தற்போது நிலமை மேலும் சிக்கலாக

### ஜிப்ரால்டார் ஷெங்கன் பகுதியாகுமா?

பிரித்தானியாமற்றும்ஐரோப்பியஒன்றியத்துக்கு இடையிலான ஒரு முன்மொழியப்பட்ட ஒப்பந்தம் ஜிப்ரால்டரை ஷெங்கன் பகுதியாக சேர்ப்பதை அறிவித்துள்ளது. இதனால் நில எல்லைக்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# கடல் கடந்த பிரித்தானிய ஆதிக்கம் தளர்கிறதா ?

கட்டுப்பாடுகள் நீக்கப்படும்.

4ம் பக்க தொடர்ச்சி...........

ஆனால், ஜிப்ரால்டரின் விமான நிலையம் மற்றும் துறைமுகம்வழியாகவரும்பயணிகளைகண்காணிப்பதற்காக ஸ்பெயின் பாதுகாப்புப் படையினர் இருக்க வேண்டுமென மாட்ரிட் அரசு இப்போது வலியுறுத்தியுள்ளது.

புதிய எல்லை கட்டுப்பாட்டு முறை ஜிப்ரால்டரின் ஒப்பந்தத்துடன்நேரடியாகதொடர்புகொண்டதல்லஎன்றாலும், இரு எல்லைகளிலும் ஆயிரக்கணக்கான குடிமக்களுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானிய குடிமக்கள் உள்ளிட்ட ஐரோப்பியர் அல்லாத குடிமக்கள் 180 நாட்களில் 90 நாட்கள் மட்டுமே ஸ்பெயினில் இருக்க அனுமதிக்கப்படுவார்கள். கூடவே, எல்லைக் காவலர்களிடம் ஏன் தாங்கள் ஸ்பெ யினுக்கு வரவிரும்புகிறார்கள் என்பதை விளக்க வேண்டிய




நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

### பிரெக்சிட்டின் வீழ்ச்சி:

ஜிப்ரால்டரில் உள்ள 96% வாக்காளர்கள் 2016 வாக்கெடுப்பில் பிரெக்சிட்டை நிராகரித்தனர். இப்போது அதன் விளைவுகளை அனுபவித்து வருகின்றனர். இது 34,000 மக்களுடன், ஸ்பெயினில் இருந்து நில எல்லையை கடக்கும் 15,000 பேரினது, தினசரி பெரும்பாலும் வேலைக்காக வருபவர்களின், வாழ்வாதாரத்திற்கு அச்சுறுத்தலாகவும் உள்ளது.

இதுவரை பல பிரெக்சிட் விதிகள் அங்கே அமல்படுத்தப்படவில்லை. மேலும் சில கட்டுப்பாடுகள் இருதரப்பிலும் விதிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், நவம்பரில் தொடங்கி, சிஷீ அல்லாத குடிமக்களுக்கான புதிய சிஷீ பயோமெட்ரிக் கட்டுப்பாட்டுத் தேவைகள் எல்லையில் ஒரு பெரும் தடையை உருவாக்கும் எனக் கூறப்படுகிறது.

ஸ்பெயின், இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய ஆணையம் இடையே பல பேச்சுக்கள் நடந்த போதிலும், எந்த உடன்பாடும் இன்னும் இதுவரை எட்டப்படவில்லை. இருப்பினும் ஜிப்ரால்டார் ஐரோப்பிய ஒன்றியத்தின் பாஸ்போர்ட் இல்லாத ஷெங்கன் பகுதியில் சேரலாம் என்பது பொதுவான கொள்கையாகும்.

தற்போதைய பதற்றங்கள் ஜிப்ரால்டரின் விமான நிலையம் மற்றும் அதன் துறைமுகத்தில் ஸ்பெயின் பொலீஸ் ரோந்து மற்றும் சோதனைகளை நடத்தும் பிரச்சினைகளை உருவாக்கி உள்ளது.

பிரிட்டனில் உள்ள சிலருக்கு, ஜிப்ரால்டார் அதிக ஸ்பானியமாக அல்லது அதிக ஐரோப்பிய நாடாக மாறியிருப்பதை இது போன்ற ஆட்சி அடையாளப்படுத்தும்.

### பிரெக்சிட்க்கு பிறகு - ஜிப்ரால்டரின் குடியுரிமை:

பிரெக்சிட்க்கு பிறகு, ஜிப்ரால்டரின் குடியுரிமை அட்டையைப் பெற்றுள்ளவர்கள் ஸ்பெயினை எளிதாகத் தாண்ட அனுமதி வழங்கப்பட்டது. அதேபோல், 15,000 ஸ்பானிய தொழிலாளர்களும் தினசரி ஜிப்ரால்டரில் எளிதாக வர்த்தகம் செய்ய முடிந்தது.

ஜிப்ரால்டரின் மக்களின் சுதந்திர போக்குவரத்தைத் தடைசெய்ய வேண்டுமா, அல்லது ஸ்பெயின் வழங்கும் அதிகளவு நன்மையுள்ள ஒப்பந்தத்தை ஏற்க வேண்டுமா என்பதை பிரித்தானியாதான் முடிவு செய்யவேண்டும் என ஸ்பெயின் அறிவித்துள்ளது.

ஜிப்ரால்டரில் ஸ்பானிய படையினருக்கு அனுமதி கிடையாது என்றும், ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒப்பந்தம் இல்லாவிட்டால், ஜிப்ரால்டரின் அரசு தங்களது புதிய கட்டுப்பாடுகளை கொண்டுவரக்கூடும் என்று எச்சரித்துள்ளது.

ஜிப்ரால்டரை பிரித்தானியாவின் சிற்றரசு என்று ஸ்பெயின் கருதுகின்றது. இது ஐக்கிய நாடுகள் சபையின் விதிமுறைகளுக்கு முரணானது எனவும் ஸ்பெயின் வாதிடுகிறது.

### யூரோ கிண்ண சர்ச்சை:

யூரோ கிண்ணத்தை (UEFA - Euro 2024) ஸ்பெயின் வென்றதன் பின்னர் நடந்த கொண்டாட்டங்களில் ஜிப்ரால்டர் என்பது ஸ்பெயின் ஒரு பகுதி என முழக்கமிட்ட இரு வீரர்




மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஸ்பெயின் நட்சத்திர வீரர்களான ரொட்றி (Rodri) மற்றும் ஐவரோ மொறட்டா (Alvaro Morata) ஆகிய இருவரும் தற்போது தடை விதிக்கப்படும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இங்கிலாந்து அணிக்கு எதிராக 2-1 என்ற கோல் கணக்கில் அதிரடி வெற்றியைப் பதிவு செய்தது ஸ்பெயின் அணி. இதன் அடுத்த நாள் மாட்ரிட் நகரில் பல ஆயிரக்கணக்கான கால்பந்து ரசிகர்கள் முன்னிலையில் ஸ்பெயின் வீரர்கள் ஜிப்ரால்டர் என்பது தமது நாட்டின் ஒரு பகுதி என்ற முழக்கத்தை முன்வைத்தனர்.

### ஜிப்ரால்டாரின் எதிர்கால நிலை ?

ஜிப்ரால்டாரில், குடிமக்கள் தங்கள் பிரிட்டிஷ்அந்தஸ்தைத்தக்கவைத்துக்கொள்ளவிரும்பினாலும், இப்போது முதன்மையான கவலை அவர்களின் சுதந்திரம் பற்றியதாகும். ஜிப்ரால்டா பிரச்சினையில் ஸ்பெயினின் பொதுக் கருத்து தொடர்ந்து கண்காணிக்கப்படுவதில்லை எனவும் கூறப்படுகிறது.

ஆனால் 2018 ஆம் ஆண்டின் தேசிய கருத்துக் கணிப்பு, பிரெக்சிட்டிற்குப் பிந்தைய பேச்சுவார்த்தைகள் பற்றி சிறு அளவினர் மட்டுமே அறிந்திருப்பதாகக் குறிப்பிடுகிறது. ஜிப்ரால்டாரின் எதிர்காலநிலை குறித்து கவலைகளை எழுப்பியுள்ளனர்.

பிரக்ஸிட்டின் விளைவாக இங்கிலாந் தில், 2023 வாக்கெடுப்பின்படி, ஒரு சிறு அளவினர் மட்டுமே ஜிப்ரால்டர் பிரிட்டிஷாராக இருக்கிறாரா அல்லது அதைப்பற்றிய கருத்தைக் கொண்டிருக்கிறார்களா என்பதில் அக்கறை கொண்டுள்ளனர்.



காலைக்கதிர் Kalaikkathir

# பொது ஒழுங்கைப் பேணுவதற்கு ஆயுதப்படையை அழைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றதா?

## மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதிக்கு கடிதம்

நாட்டில் பொது ஒழுங்கைப் பேணுவதற்காக இராணுவத்தினர், கடற்படையினர் மற்றும் விமானப் படையினருக்கு அழைப்புவிடுக்கும் வகையில் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் கரிசனையை வெளிப்படுத்தியிருக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அளவுகோல்களுக்குப் புறம்பாகப் பிறப்பிக்கப்படக்கூடிய இத்தகைய கட்டளைகளால் மனித உரிமைகள் பாதுகாப்பில் எதிர்மறையான தாக்கம் ஏற்படக்கூடும் எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12ஆவது பிரிவின் கீழ் 2024 செப்டெம்பர் 26ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்ட 2403ஃ47ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக (முன்னைய அரசாங்கத்தினால் பிறப்பிக்கப்பட்ட இக்கட்டளை மாதாந்தம் புதுப்பிக்கப்பட்டுவருகிறது) செப்டெம்பர் 24ஆம் திகதி முதல் ஒரு மாதகாலத்துக்கு இலங்கையின் ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் பொது ஒழுங்கைப் பேணுவதற்காக இலங்கை இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படையின் அனைத்து உறுப்பினர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து தமது கரிசனையை வெளிப்படுத்தி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் உயர்நீதிமன்ற நீதியரசர் (ஓய்வுபெற்ற) எல்.ரீ.பி.தெஹிதெனியவினால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்திலேயே மேற்குறிப்பிட்ட விடயங்கள் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன. அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அரசாங்கமொன்றினால் நிர்வாகம் சார்ந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்போது, அவை சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கும், தராதரங்களுக்கும் ஏற்றவாறு அமைவதை உறுதிப்படுத்தும் வகையிலான பரிந்துரைகளை அரசாங்கத்திடம் முன்வைப்பதற்கு 1996ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 10 (ஈ) பிரிவின் பிரகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12 (1) பிரிவு மீது கவனம் செலுத்துமாறு உங்களிடம் கேட்டுக்கொள்கிறோம். அப்பிரிவின்படி ஏதேனுமொரு பிரதேசத்தில் வசிக்கும் பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவிக்கக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டாலோ அல்லது ஏற்படவிருக்கும் சந்தர்ப்பங்களிலோ, அதனைக் கையாள்வதற்கு அப்பிரதேசத்தில் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் பொலிஸார் போதுமானளவில் இல்லை என ஜனாதிபதி கருதும் பட்சத்தில், அந்தப் பிரதேசத்தின் பொது ஒழுங்கைப் பேணுவதற்காக வர்த்தமானி ஊடாக வெளியிடப்படும் கட்டளையொன்றின் மூலம் எந்தவொரு ஆயுதப்படை அங்கத்தவரையும் அழைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் மிக முக்கியமாக 'பொதுமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான நிலைமைகள் ஏற்படும்போது' மற்றும் 'அத்தகைய சூழ்நிலையை சமாளிப்பதற்குரிய பொலிஸ் அதிகாரிகள் போதுமானளவில் இல்லாதபோது' ஆகிய வசனங்கள் தொடர்பில் மேற்கூறப்பட்ட பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள கடுமையான அளவுகோல்கள் குறித்து நீங்கள் விசேட கவனம் செலுத்தவேண்டும். அதாவது பொதுமக்கள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவிக்கக்கூடிய நிலைகள் ஏற்பட்டிருப்பதாகவும், நாட்டின் பொது ஒழுங்கைப் பேணுவதற்கு பொலிஸாருக்கு ஆற்றல் இல்லை எனவும் ஜனாதிபதி கருதும் பட்சத்தில் மாத்திரமே அப்பணியில் ஆயுதப்படைகளை ஈடுபடுத்தவேண்டும்.

கடந்த சில வருடங்களாக இவ்வாறான கட்டளையைப் பிறப்பித்தல் சாதாரண விடயமாகக் காணப்படுகின்ற போதிலும், மேற்குறிப்பிடப்பட்டவாறான சந்தர்ப்பங்களில் மாத்திரமே இக்கட்டளையைப் பிறப்பிக்க வேண்டும் என நாம் கருதுகின்றோம். அதேபோன்று சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயம் நடைமுறைப்படுத்தப்படும் முறையைக் கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட கட்டமைப்பான ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் குழு, பொலிஸாரின் கடமைகளைச் செய்வதற்கு ஆயுதப்படைகள் ஈடுபடுத்தப்படுவது குறித்து அதன் தீவிர கரிசனையை வெளிப்படுத்தியுள்ளது. அதன்மூலம் பொலிஸாரின் பணிகளில் ஆயுதப்படையினரை ஈடுபடுத்துவதன் ஊடாக நாட்டின் மனித உரிமைகள் பாதுகாப்பின் மீது ஏற்படக்கூடிய தாக்கம் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆகவே இதுபோன்ற கட்டளைகளைப் பிறப்பிப்பதை மீள்பரிசீலனை செய்யுமாறும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பொலிஸார் மீதான நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் உங்களிடம் வலியுறுத்துகின்றோம்.

அதேவேளை தற்போது பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கும் பின்னணியில், அரசியலமைப்பின் 104 (டி) பிரிவின் ஊடாக தமக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் பிரகாரம், சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடாத்துவதற்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு சம்பவத்தையும் தடுப்பதற்கு அல்லது கட்டுப்படுத்துவதற்கு ஆயுதப்படைகளை ஈடுபடுத்துதல் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் உங்களுக்கு எவ்வித பரிந்துரைகளும் முன்வைக்கப்படவில்லை. அவ்வாறிருக்கையில் பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் கீழ் மேலே சுட்டிக்காட்டப்பட்டவாறான கட்டளையொன்றைப் பிறப்பிக்கமுடியுமா என்பது பற்றியும் நீங்கள் ஆராயவேண்டும்.

மேலும் பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 21(4) ஆவது பிரிவானது, மேற்கூறப்பட்டவாறு பிறப்பிக்கப்பட்ட கட்டளையொன்றை பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலம் திருத்தியமைக்கவோ அல்லது இரத்துச்செய்யவோ முடியும் எனக்கூறுகிறது. இருப்பினும் தற்போது பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12ஆவது பிரிவின் கீழ் இவ்வாறான கட்டளையைப் பிறப்பிப்பது ஏற்புடையதா என்பது குறித்தும் நீங்கள் அவதானம் செலுத்தவேண்டும் என்று அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (05)

# அரசியல் உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய நபர்களுக்கே மக்கள் வாக்களிக்கவேண்டும்

## மன்னார் ஆயர் கோரிக்கை




நமது நாளாந்த பொருளாதார மற்றும் வாழ்வியல் தேவைகள் என்றுமில்லாதவாறு மேலோங்கி நிற்கும் இவ்வேளையில் அவற்றை மட்டும் கருத்திற்கொள்ளாமல் நாம் இதுவரை காலமும் போராடி வந்த அரசியல் உரிமைகளை நாடாளுமன்றம் ஊடாக வென்றெடுக்கக்கூடிய நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

இலங்கை நாடாளுமன்ற தேர்தல் (2024) தொடர்பாக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை விடுத்திருக்கும் அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கை நாட்டு மக்களாகிய நாம் மீண்டுமொரு தேர்தலை எதிர்நோக்கி நிற்கின்றோம். ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு இப்போது நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளவிருக்கிறோம்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. வடக்கு மாகாணத்தில் வன்னி தேர்தல் மாவட்டம் மற்றும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் என இரண்டிலும் சேர்த்து குறித்தொதுக்கப்பட்டுள்ள 12 ஆசனங்களுக்காக 45 அரசியல் கட்சிகளும் 46 சுயேச்சைக் குழுக்களும் களமிறங்கியுள்ளன. வேட்பாளர்கள் என்ற அடிப்படையில் 800 இற்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களம் காண்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலை தொடர்ந்து வருகின்ற இந்த நாடாளுமன்றத் தேர்தலானது இலங்கை முழுவதும் குறிப்பாக வடக்கு, கிழக்கு பகுதியாகிய தமிழர் தாயகப் பகுதியில் பலத்த எதிர்பார்ப்புகள் நிறைந்த தேர்தலாக அமைந்துள்ளது.

உரிமை மறுப்புக்கு இலக்கான சிறுபான்மை மக்களாகிய நாம் நமது அனைத்து வகையான உரிமைகளையும் பெறுவதற்குரிய ஆகக்கூடிய வழிமுறை அரசியல்தான். இந்த அரசியல் பிரதிநிதிகளாக போட்டியிடுகின்ற அனைவரும் அதன் கனதியை உணர்ந்தவர்களா? என்பது கேள்விக்குறியே.

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் முக்கியமான திருப்புமுனைகள் நிறைந்த ஒரு காலகட்டத்தில் நாம் நிற்கின்றோம். ஜனாதிபதித் தேர்தலின்போது தெற்கில் ஏற்பட்ட அரசியல் சிந்தனை மற்றும் வடக்கு, கிழக்கிலும் இந்தத் தேர்தலில் ஏற்பட வேண்டும் என்பது பொதுவான எதிர்பார்ப்பாக உள்ளது.

அதேவேளை என்றுமில்லாதவாறு அதிக வேட்பாளர்கள் களமிறங்கியுள்ள இத்தேர்தல் பொதுமக்கள் மத்தியில் யாருக்கு வாக்களிப்பது என்ற குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் யாருக்கு வாக்களிக்கக் கூடாது, என்பதையும் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதையும் வாக்காளர்கள் தமது கவனத்தில் கொண்டு செயற்பட வேண்டும். 30 வருட அஹிம்சை போராட்டமும் 30 வருட ஆயுதப் போராட்டமும் எதற்காக ஏற்பட்டனவோ அந்தக் காரணங்கள் இன்னும் தீர்க்கப்படாமலே உள்ளன.

இந்நிலையில் நமது நாளாந்த பொருளாதார மற்றும் வாழ்வியல் தேவைகள் என்றுமில்லாதவாறு மேலோங்கி நிற்கும் இவ்வேளையில் அவற்றை மட்டும் கருத்திற்கொள்ளாமல் நாம் இதுவரை காலமும் போராடி வந்த அரசியல் உரிமைகளை நாடாளுமன்றம் ஊடாக வென்றெடுக்கக்கூடிய நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும்.

தமிழ் மக்களாகிய நாம் நமது சுயநிர்ணய உரிமை உட்பட கால காலமாக நாம் வலியுறுத்தி வருகின்ற தமிழ் மக்களின் அடிப்படை கோட்பாடுகளை தொடர்ந்து முன்னகர்த்தி செல்லக்கூடியவர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும்.

உறவினர், நண்பர் போன்ற வட்டங்களை கடந்து செயற்படக்கூடிய தமிழ் தேசியத்தை முன்னிலைப்படுத்தக்கூடிய இலஞ்சஊழலற்ற செயல்திறன் வாய்ந்த சொல்லுக்கும் செயலுக்கும் ஒத்திசைவுள்ள நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும்.

மாறிவரும் அரசியல் பொருளாதார சமூக சூழ்நிலைகளுக்கு ஏற்ப தேர்தல் தொடர்பான சமகால அரசியல் தொடர்பான நமது பார்வையிலும் கண்ணோட்டத்திலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும்.

ஒளிமயமானதொரு எதிர்காலத்தை நமக்குக் கொண்டுவரக்கூடிய ஒரு தீர்மானமிக்க தேர்தலாக இது அமைவதற்கு நாம் எல்லோரும் நமது வாக்குரிமையை பயன்படுத்துவோம்.

நமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் மிகுந்த பொறுப்புணர்வோடு செயல்படுவோம். – என்றுள்ளது.(05)

# மோ. சைக்கிள் – சைக்கிள் விபத்தில்: ஒருவர் இறப்பு

கரந்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அமரகீர்த்திகம பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளொன்று சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என கரந்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

கரந்தெனிய, அமரகீர்த்திகம பிரதேசத்தில் வசிக்கும் 81 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது –

பொரகந்தவிலிருந்து அமரகீர்த்திகம நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் எதிர்த்திசையிலிருந்து வந்த சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்து பொரகந்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக பலப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர், அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பலப்பிட்டிய வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் கரந்தெனிய பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)

# 5 இறக்குமதிப் பண்டங்களுக்கும் புதிய வரி இல்லை அதன் செல்லுபடியாகும் காலம் மாத்திரமே நீட்டிப்பு

## நிதி அமைச்சு தகவல்

இறக்குமதி செய்யப்படும் ஐந்து பண்டங்களுக்கு வரி விதித்து 2023.10.13ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் செல்லுபடியாகும் காலம் நிறைவடைந்துள்ள நிலையில், அந்த வர்த்தமானி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. ஆகவே இறக்குமதி செய்யப்படும் பண்டங்களுக்கு புதிதாக விசேட வரிகள் ஏதும் விதிக்கப்படவில்லை என நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு விசேட அறிக்கை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

2007ஆம் ஆண்டு 48ஆம் இலக்க விசேட பண்ட வரி சட்டத்தின் பிரகாரம் 2024.10.14ஆம் திகதியன்று 2406ஃ02 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக 5 பண்டங்களுக்காக வரி விதிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் தெளிவுபடுத்தல் அவசியமானதாகும்.

2007ஆம் ஆண்டு 48ஆம் இலக்க விசேட பண்ட வரி சட்டத்தின் 2ஆவது பிரிவின் பிரகாரம் வரி விதிப்பதற்கான பணிப்பில் பிரதானமாக உரிய பண்டங்கள் குறிப்பாக சுங்க செயற்பாடுகளுடன் தொடர்புடைய வரி வீதங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அந்த பணிப்பு அமுல்படுத்தப்படும் உரிய காலப்பரப்பு, உரிய பணிப்புக்காக 3 பிரதான சட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அந்தசட்டங்களின் அவசியத்தை அடிப்படையாகக் கொண்டு, இறக்குமதி செய்யப்படும் ஐந்து பண்டங்களுக்காக விசேட பண்ட வரி விதிப்பு அமுல்படுத்தப்பட்டிருந்த 2023 ஒக்ரோபர் 14 ஆம் திகதியன்று இலக்க 2353ஃ77 என்ற வர்த்தமானியின் செல்லுபடியாகும் காலம் 2024.10.13ஆம் திகதியுடன் நிறைவடைந்தது. ஆகவே அந்த வர்த்தமானியின் செல்லுபடி காலத்தை 2024.12.31ஆம் திகதி வரை நீட்டிப்பதற்காக 2024.10.14ஆம் திகதியன்று இலக்கம் 2406ஃ02 என்ற வர்த்தமானி வெளியிடப்பட்டது.

ஆகவே இறக்குமதி செய்யப்படும் பண்டங்களுக்கு விசேட வரிகள் ஏதும் விதிக்கப்படவில்லை. இறக்குமதி செய்யப்படும் பருப்புக்காக விதிக்கப்பட்டிருந்த 25 சதம் வரி தொடர்ந்து அமுலில் இருக்கும். தேசிய கடற்றொழில் கைத்தொழில் மற்றும் பழவகைகள் உற்பத்தியை பாதுகாக்கும் நோக்கில் மற்றும் வெளிநாட்டு கையிறுப்பினை கருத்திற் கொண்டு ஏனைய 4 பண்டங்களுக்காக விதிக்கப்பட்டிருந்த வரி வீதம் தொடர்ந்து பேணப்படும்.

பொதுவாக இந்த சட்டத்தின் பிரகாரம் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தல் ஒரு வருடகாலத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்த வரி தொடர்பில் முறையாக அவதானம் செலுத்தப்பட்டு வர்த்தமானியின் செல்லுபடியாகும் காலம் மாத்திரம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

(05)

# வர்த்தக நடவடிக்கைகளில் ஆளும்தரப்பினது நேரடித் தலையீடுகள் தவிர்க்கப்படவேண்டும்

## அலி சப்ரி கூறுகிறார்



பெரும்பாலும் அரசியல் சார்ந்த காரணிகளால் ஆதிக்கம் செலுத்தப்படுகின்ற அதேவேளை, ஆட்சிமாற்றம் நிகழும்போது அதற்கேற்றவாறு மாற்றியமைக்கப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களைக் கொண்ட இலங்கை போன்றதொரு நாட்டின் வர்த்தக நடவடிக்கைகளில் அரசாங்கம் நேரடியாகத் தலையீடு செய்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என முன்னாள் வெளிவிவகார மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி வலியுறுத்தியுள்ளார்.

நாட்டின்பொருளாதாரக்கொள்கைகளில்தொடர்ச்சித்தன்மை பேணப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி தனது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளப் பக்கத்தில் பதிவொன்றை இட்டிருக்கும் முன்னாள் அமைச்சர் அலி சப்ரி, இதுகுறித்து மேலும் கூறியிருப்பதாவது –

பெரும்பாலும் அரசியல் சார்ந்த காரணிகளால் ஆதிக்கம் செலுத்தப்படுகின்ற அதேவேளை, ஆட்சிமாற்றம் நிகழும்போது அதற்கேற்றவாறு மாற்றியமைக்கப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களைக் கொண்ட இலங்கை போன்றதொரு நாட்டின் வர்த்தக செயற்பாடுகளில் அரசாங்கம் நேரடியாகத் தலையீடு செய்வதைத் தவிர்த்துக்கொள்ளவேண்டும். வாக்கு வங்கி அடிப்படையிலான அரசியல் மற்றும் அமைச்சர்களின் மாற்றம் என்பவற்றுக்கு ஏற்ப அடிக்கடி மாற்றமடையும் கொள்கைகள் நாட்டில் ஸ்திரமற்ற மற்றும் தொடர்ச்சியற்ற தன்மையைத் தோற்றுவித்திருக்கின்றன.

இருப்பினும், குறிப்பாக பெற்றோலியம் எரிபொருள், நீர் மற்றும் மின்சாரம் போன்ற அத்தியாவசிய சேவைகளை விநியோகிக்கும் துறைகள் மேற்கூறப்பட்ட விதியிலிருந்து விதிவிலக்குப் பெறமுடியும். வெளிப்படையான போட்டித்தன்மையின் மூலம் நுகர்வோருக்குசாதகமானவிலையில்மின்சாரத்தை வழங்கக்கூடியசாத்தியப்பாடுகாணப்படும்பட்சத்தில், மின்னுற்பத்தியை தனியார்மயப்படுத்த முடியும். ஆனால், இவ்வாறான அதிக கேள்வியுடைய சேவைகள்செலவினஅடிப்படையிலானவிலையிடல் முறைமையுடன் கூடியதாக அரசினாலேயே கட்டுப்படுத்தப்படவேண்டும் என்பதே என்னுடைய தனிப்பட்ட அபிப்பிராயமாகும்.

விசேடமாகமுதலீடுகளில்தாக்கத்தைஏற்படுத்தும் துறைகள் உள்ளடங்கலாக சகலவற்றிலும் நிலையான, தொடர்ச்சித்தன்மை வாய்ந்த கொள்கைகளைப் பேணுவது பொருளாதார வளர்ச்சியை அடைந்துகொள்வதற்கு மிக அவசியமாகும். மாறாக கொள்கைகளில் அடிக்கடி மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் நாட்டின் வளர்ச்சியிலும், சுபீட்சத்திலும் சடுதியான பின்னடைவை ஏற்படுத்தும்.

உதாரணமாக நல்லாட்சி அரசாங்கத்தினால் துறைமுக நகரத்திட்டம் இடைநிறுத்தப்பட்டமை மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தினால் ஜப்பான் நிதியுதவியின் கீழான இலகு ரயில் சேவைத்திட்டம் இரத்துச்செய்யப்பட்டமை என்பன முதலீட்டாளர்கள் மத்தியில் அதிர்வலைகளைத் தோற்றுவித்திருந்தன. எனவே நாம் கடந்த காலத் தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்வதும், குறுங்கால நலன்களைப்புறந்தள்ளி, நாட்டின்நீண்டகால அபிவிருத்திக்கு முன்னுரிமை அளிப்பதும் இன்றியமையாததாகும். ஆகவே குறிப்பாக முதலீடுகளுடன் தொடர்புடைய துறைகளில் கொள்கைசார் தொடர்ச்சித்தன்மையைப் பேணுவதென்பது, முதலீட்டாளர்கள்மத்தியில் நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கும், நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் மிகவும் அவசியம் என வலியுறுத்தியுள்ளார். (05)

# மாவை சேனாதிராசாவை நலம் விசாரித்த புளொட்



திடீர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் அரசு கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதிராசாவை முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், கட்சியின் முக்கியஸ்தர் பிருந்தாவன், சாவகச்சேரி நகரசபை முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர், பிரதேச சபை உப தவிசாளர் செ.மயூரன் ஆகியோர் நேரில் சென்று நலம் விசாரித்தனர்.

இதன்போது முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கஜதீபன் மாவை சேனாதிராசாவின் உடல்நலம், அவருக்கு வழங்கப்படுகின்ற சிகிச்சைகள் தொடர்பாக கேட்டறிந்ததோடு, அவர் தொடர்ச்சியாக நலமோடு தமிழ் தேசிய ஒற்றுமைக்காகப் பணியாற்றவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.(05)

# சிங்கபுரத்தில் தீ விபத்து தாய், தந்தை, மகள் சாவு



சிலாபம், சிங்கபுர பகுதியில் வீடொன்றில் சனிக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்தில் தாய், தந்தை மற்றும் அவர்களது மகள் உயிரிழந்துள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் 42 வயது ஆண், 40 வயதுடைய பெண் மற்றும் 15 வயதுடைய சிறுமி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், இந்த தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை எனவும் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.(05)



## வெளிநாட்டவர்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் வேறு நாட்டின் குடியுரிமை பெற்றால், சீன அரசின் குடியுரிமை இரத்துச்செய்யப்படும். அப்படியிருக்கும்போது அவர்களிடம் மூன்று நாட்டுக் கடவுச் சீட்டுக்கள் இருந்தமை சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியதன் காரணமாகவே அவர்கள் நாடுகடத்தப்பட்டனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாடு கடத்தப்பட்ட 36 வயது மற்றும் 37 வயதுடைய இருவரும் சனிக்கிழமை இரவு 9.35 மணியளவில் தாய்லாந்தின் பேங்கொக்கில் இருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் யுஎல் -403 விமானமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

சீன பிரஜைகள் தற்போது இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பெரும் இணையவழிக் குற்றங்களிலும் பணமோசடிகளிலும் ஈடுபட்டு வருவதாக தகவல்கள் வெளியாகி வருவதால், அவர்கள் இருவரையும் நாடுகடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஆளுநர்களின் கீழ் திட்டங்களை தொடர ஜனாதிபதி விடுத்த உத்தரவுக்குத் தடை

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை மாகாண ஆளுநர்களின் மேற்பார்வையில் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவழங்கிய உத்தரவை தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிறுத்தியுள்ளது.

அந்தத் திட்டங்களைத் தொடங்குவது தேர்தல் சட்டங்களை மீறும் செயல் என்ற அடிப்படையில் தேர்தல் ஆணையம் அந்த உத்தரவை நிறுத்தி வைத்துள்ளது. மாகாண ஆளுநர் பதவி என்பது அரசியல் நியமன என்பதே அதற்கான காரணம் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் செயலிழந்துள்ள மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் செயற்பாடுகளை மாகாண ஆளுநர்களின் இணைத் தலைமையின் கீழ் தொடர்வதற்கான பொறிமுறையை தயார் செய்யுமாறு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி என்.எஸ். குமாரநாயக்க இதற்கு முன்னர் பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டம் தொடர்பாக, மாவட்ட அளவில் நடைமுறைப்படுத்தப்பட்ட பல அபிவிருத்தித் திட்டங்களை நடத்துவதற்கும், மேற்பார்வையிடுவதற்கும், மீளாய்வு செய்வதற்கும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்ததோடு, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் செயலற்ற தன்மையினால் அந்தத் திட்டங்களும் பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளன.

## இலஞ்ச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்குமாகாணத்தில் வன்னி தேர்தல் மாவட்டம் மற்றும் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் என இரண்டிலும் சேர்த்து குறித்தொதுக்கப்பட்டுள்ள 12 ஆசனங்களுக்காக 45 அரசியல் கட்சிகளும் 46 சுயேச்சைக் குழுக்களும் களமிறங்கியுள்ளன. வேட்பாளர்கள் என்ற அடிப்படையில் 800க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் களம் காண்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து வருகின்ற இந்த நாடாளுமன்றத் தேர்தலானது இலங்கை முழுவதும் குறிப்பாக வடக்கு, கிழக்கு பகுதியாகிய தமிழர் தாயகப் பகுதியில் பலத்த எதிர்பார்ப்புகள் நிறைந்த தேர்தலாக அமைந்துள்ளது.

உரிமைமறுப்புக்கு இலக்கான சிறுபான்மை மக்களாகிய நாம் நமது அனைத்து வகையான உரிமைகளையும் பெறுவதற்குரிய ஆகக்கூடிய வழிமுறை அரசியல்தான். இந்த அரசியல் பிரதிநிதிகளாக போட்டியிடுகின்ற அனைவரும் அதன் கனதியை உணர்ந்தவர்களா? என்பது கேள்விக்குறியே.

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் முக்கியமான திருப்புமுனைகள் நிறைந்த ஒரு காலகட்டத்தில் நாம் நிற்கின்றோம். ஜனாதிபதித் தேர்தலின்போது தெற்கில் ஏற்பட்ட அரசியல் சிந்தனை மற்றும் வடக்கு, கிழக்கிலும் இந்தத் தேர்தலில் ஏற்பட வேண்டும் என்பது பொதுவான எதிர்பார்ப்பாக உள்ளது.

அதேவேளை என்றுமில்லாதவாறு அதிக வேட்பாளர்கள் களமிறங்கியுள்ள இத்தேர்தல் பொதுமக்கள் மத்தியில் யாருக்கு வாக்களிப்பது என்ற குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

யாருக்கு வாக்களிக்கக் கூடாது, என்பதையும் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதையும் வாக்காளர்கள் தமது கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும். 30 வருட அகிம்சை போராட்டமும் 30 வருட ஆயுதப் போராட்டமும் எதற்காக ஏற்பட்டனவோ அந்தக் காரணங்கள் இன்னும் தீர்க்கப்படாமலேயே உள்ளன.

இந்நிலையில் நமது நாளாந்த பொருளாதார மற்றும் வாழ்வியல் தேவைகள் என்றுமில்லாதவாறு மேலோங்கி நிற்கும் இவ்வேளையில் அவற்றை மட்டும் கருத்திற்கொள்ளாமல் நாம் இதுவரை காலமும் போராடி வந்த அரசியல் உரிமைகளை நாடாளுமன்றம் ஊடாக வென்றெடுக்கக்கூடிய நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும்.

தமிழ் மக்களாகிய நாம் நமது சுயநிர்ணய உரிமை உட்பட கால காலமாக வலியுறுத்தி வருகின்ற தமிழ் மக்களின் அடிப்படை கோட்பாடுகளை தொடர்ந்து முன்னகர்த்திச் செல்லக்கூடியவர்களுக்கே வாக்களிக்க வேண்டும்.

உறவினர், நண்பர் போன்ற வட்டங்களை கடந்து செயற்படக்கூடிய தமிழ் தேசியத்தை முன்னிலைப்படுத்தக்கூடிய இலஞ்ச ஊழலற்ற செயல்திறன் வாய்ந்த சொல்லுக்கும் செயலுக்கும் ஒத்திசைவுள்ள நபர்களுக்கே நாம் வாக்களிக்க வேண்டும்.

மாறிவரும் அரசியல் பொருளாதார சமூக சூழ்நிலைகளுக்கு ஏற்ப தேர்தல் தொடர்பான சமகால அரசியல் தொடர்பான நமது பார்வையிலும் கண்ணோட்டத்திலும் மாற்றங்கள் ஏற்படவேண்டும்.

ஒளிமயமானதொரு எதிர்காலத்தை நமக்குக்கொண்டுவரக்கூடிய ஒருதீர்மானமிக்க தேர்தலாக இது அமைவதற்கு நாம் எல்லோரும் நமது வாக்குரிமையை பயன்படுத்துவோம். நமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் மிகுந்த பொறுப்புணர்வோடு செயல்படுவோம் என்றுள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# எனது நம்பிக்கையைத் தீவக மக்கள் என்றுமே வீணாக்கியது கிடையாது

## டக்ளஸ் தெரிவிப்பு

நான் 90 களிலிருந்து இந்த தீவக மக்களின் உணர்வுகளிலிருந்து அவர்களது குரலாய் ஒலித்துக்கொண்டிருக்கின்றேனோ அதேபோன்று எனது நம்பிக்கையையும் தீவக மக்கள் வீணாக்கியமை கிடையாது. கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழ் மக்களுக்கு நான் சரியான வழிநடத்தலையும் வழிமுறையையுமே வழங்கிவருகின்றேன் எனத் தெரிவித்த ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அதனால்தான் தீவக மக்கள் எனது சேவைக்கு இன்னும் பக்கபலமாக இருந்துஎன்னைநாடாளுமன்றுக்குஅனுப்பி வருகின்றார்கள் என்றார்.





அத்துடன், இம்முறையும் அந்த ஆதரவு தொடரும் என வலுவாக நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

வேலணை மற்றும் வடக்கு நாரந்தனை, நாரந்தனை மத்தி ஆகிய பிரதேசங்களின் மக்களுடனான சந்திப்புக்கள் நேற்;று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது.

இதன்போது இவ்வாறு தெரிவித்திருந்த அவர் மேலும் கூறுகையில் -

நான் 90 களிலிருந்து இந்த தீவக மக்களின் உணர்வுகளிலிருந்து அவர்களது குரலாய் ஒலித்துக்கொண்டிருக்கின்றேனோ அதேபோன்று எனது நம்பிக்கையையும் தீவக மக்கள் வீணாக்கியது கிடையாது.

குறிப்பாக, எமது வழிமுறையே சாத்திய மானதுஎன்பதும்இன்றுநிரூபணமாகியுள்ளது. இதை ஏற்றுள்ள மக்கள் இம்முறை மத்தியில் உருவாகியுள்ளமாற்றம்போன்றுவடக்கிலும் ஈபிடிபியிடம் அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்துவார்கள் என நம்புகின்றேன்.

மேலும்ஈ.பி.டிபியின்தேசியநல்லிணக்கம் மத்தியஅரசுடன்மட்டுமல்லாதுஏனையஇன மக்கள்மத்தியிலும்எப்போதும்வலுவாகவே இருக்கின்றது.

அதனால்தான் மக்கள் வழங்குகின்ற ஆணையின்பலத்தின்அடிப்படையிலேயே மத்தியில்உள்ளஅரசாங்கத்தோடுஆட்சியில் பங்கெடுப்பதற்கும், பேரம் பேசலுக்கும் நாடாளுமன்ற தேர்தல்களில் அதிகரித்த ஆசனங்களை வழங்குங்கள் எனவும் கோரிவருகின்றேன்.

அதனடிப்படையில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் யதார்த்த அரசியலையும் ஈ.பி.டி.பி. கட்சியின் அரசியல் செயற்பாடுகளில் இருக்கின்ற நியாயத்தினையும்புரிந்துகொண்டுஉங்களது ஆதரவுபலத்தையும்வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த வகையில் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற எமது கட்சியின் இலக்கை அடைவதற்கு வரவிருக்கின்ற நாடாளுமன்ற தேர்தல் எமது மக்கள் எமது கட்சிக்கு அணிதிரண்டு வாக்களித்து எம்மை வெற்றிபெறச் செய்வார்கள் என நம்புகின்றேன். - என்றார். (05)

# வவுனியாவில் ரிஷாத்தின் தேர்தல் பிரசாரக் கூட்டம்




ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் தேர்தல் பிரசார கூட்டம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வவுனியாவில் நடைபெற்றது.

வவுனியாவிலுள்ள தனியார் விடுதியில் இந்தகூட்டம்இடம்பெற்றதுடன், இதில்கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.(05)



# கறுவாத் தோட்டத்தில் தீ

கொழும்பு - கறுவாத் தோட்டம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மலலசேகர மாவத்தையில் அமைந்துள்ள அரச குடியிருப்பில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக கறுவாத் தோட்டம் பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தீ விபத்து சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது. 119 நிலையத்திலிருந்து கறுவாத் தோட்டம் பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் உடனடியாக செயற்பட்டபொலிஸ்உத்தியோகத்தர்கள்மற்றும் தீயணைப்பு திணைக்கள அதிகாரிகள் தீயை அணைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தீயால்உயிர்சேதம்எதுவும்ஏற்படவில்லை என்றும் சொத்து சேதம் இன்னும் மதிப்பிடப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளை கறுவாத் தோட்டம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# புலம்பெயர் தமிழர்களைப் பாதுகாப்பதற்கு இயலுமான நடவடிக்கைகளை எடுப்போம்

## கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவிப்பு



ஏனைய பல்வேறு புலம்பெயர் சமூகங்களைப்போன்று கனேடியவாழ் தமிழர்களும் இலங்கை அரசின் நடவடிக்கைகளால் பாதிக்கப்படுவதாகவும், அவர்களைப் பாதுகாப்பதற்கு இயலுமான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவேண்டியிருக்கிறது எனவும் கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்தார்.

கனடாவின் தேர்தல் முறைமைகள் மற்றும் ஜனநாயகக் கட்டமைப்புக்கள் மீதான வெளியகத் தலையீடுகள் தொடர்பில் கடந்த 16 ஆம் திகதி நடத்தப்பட்ட பகிரங்க நேர்காணலில் கலந்துகொண்டு பதிலளித்த கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, கனடாவைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் தமிழர் உரிமைகள் குழுவின் உறுப்பினர் கற்பனா நாகேந்திராவினால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கனடாவின் ப்ரம்டன் நகரில் தமிழினப் படுகொலைநினைவுத்தூபியைஅமைப்பதற்கு முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு வலியுறுத்தி ப்ரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுனுக்கு டொரன்டோவில் உள்ள இலங்கையின் கொன்சியூலர் நாயகம் துஷார ரொட்ரிகோவினால் கடந்த மேமாதம் எழுதப்பட்ட கடிதம், கடந்த ஓகஸ்ட் மாதம் ஆங்கில ஊடகமொன்றினால் பகிரங்கப்படுத்தப்பட்டது. அதனைத்தொடர்ந்து அந்நினைவுத்தூபியை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்ட வேளையிலும், அதற்கு எதிர்ப்பினை வெளிப்படுத்தி அங்கு வாழும் புலம்பெயர் சிங்களவர்களால் கவனவீர்ப்புப் போராட் டமொன்று நடத்தப் பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் மேற்குறிப்பிட்ட பகிரங்க நேர்காணலின்போது கனடாவில் வாழும் தமிழர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்தினால் அண்மையகாலங்களில் மேற்கொள்ளப்பட்டுவரும் தலையீடுகள் தொடர்பில் கனேடிய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்று கற்பனா நாகேந்திரா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பிரதமர் ட்ரூடோ, இக்குறித்த சம்பவம் தனக்கு மேலதிக தகவல்கள் தேவைப்படுவதாகக் குறிப்பிட்டார். இருப்பினும் ஏனைய பல்வேறு புலம்பெயர் சமூகங்களைப்போன்று கனேடியவாழ் தமிழர்களும் இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைத் தான் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்த அவர், எனவே புலம்பெயர் தமிழர்களைப் பாதுகாப்பதற்கு அவசியமான சகல நடவடிக்கைகளையும் தாம் முன்னெடுக்கவேண்டும் எனக் குறிப்பிட்டார். (05)

# ஹெரோயினுடன் ஒருவர் மாளிகாவத்தையில் கைது

கொழும்பு, மாளிகாவத்தையில் உள்ள வீடொன்றை சோதனையிட்டதில் ஹெரோயினுடன் பெண்ணொருவர் சனிக்கிழமை மாளிகாவத்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாளிகாவத்தை பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த பெண் கொழும்பு 10ஐ வசிப்பிடமாக கொண்ட 32 வயதுடையவர் ஆவார்.

இவரிடமிருந்து 06 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளில் மாளிகாவத்தை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)

# இரண்டு சந்கேகநபர்கள் பேலியகொடயில் கைது

பேலியகொடபொலிஸ்பிரிவுக்குட்பட்டநுகே வீதிச் சந்திக்கு அருகில் சந்தேகத்துக்கிடமான முறையில்நடந்துகொண்டநபரொருவர், கடந்த 15ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவருடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் சனிக்கிழமை களனி பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 15ஆம் திகதி கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 23 வயதுடைய நெல்லிகஹவத்த, பேலியகொட பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

அவரிடமிருந்து 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையின்போது,

இவர் பதிவு செய்யப்பட்ட குற்றவாளி எனவும், நச்சு போதை மருந்துகளுக்கு அதிக அடிமையாக இருக்கும் ஒருவர் எனவும், அளுத்கடை நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள 05 குற்ற வழக்குகளுக்காகத் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒருவர் என்றும் கைரேகைகள்மூலம்அவர்14குற்றங்களுக்காக தேடப்பட்டு வந்த சந்தேகநபர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதேவேளை வீடுகள், கடைகள் மற்றும் பாடசாலைகளில் திருடப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்து போதைப்பொருள் கொள்வனவுசெய்யபணம்சம்பாதித்தமையும் விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர் அளுத்கடையில் உள்ள நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், சந்தேகநபரின் வாக்குமூலத்தின்பிரகாரம், திருடப்பட்ட சொத்து மற்றுமொரு சந்தேகநபர் ஊடாக விற்பனை செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அந்த நபர் 42 வயதுடைய வெல்லம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்தவர் ஆவார்.

சந்தேகநபர்களின் திருடப்பட்ட சில சொத்துக்கள் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளில் களனிப் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.(05)

# புளொட் வேட்பாளர் அறிமுகம் வவுனியாவில் நேற்று நடந்தது









ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியில் உள்ள புளொட்டின் வேட்பாளர் அறிமுக நிகழ்வும் கட்சி ஆதரவாளர்களுடனான கலந்துரையாடலும் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வவுனியாவில் நடைபெற்றது.

கட்சியின்மத்தியகுழுஉறுப்பினர் மோகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வானது கட்சியின் ஸ்தாபகர் உமாமகேஸ்வரனின் திருவுருவப்படத்துக்கு விளக்கேற்றலோடு ஆரம்பமானது.

இதன்போது வேட்பாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டதோடு எதிர்வரும்நாடாளுமன்றத்தேர்தல்தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், வேட்பாளரான முன்னாள் மாகாண சபைஉறுப்பினர்கந்தையாசிவநேசன், வேட்பாளர் வைரமுத்து திருச்செல்வம் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், கட்சி ஆதரவாளர்கள் என பலர் கலந்துகொண்டனர். (05)

# எரிந்த நிலையில் பெண்ணின் சடலம் மட்டக்களப்பில் மீட்பு

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள கூளாவடி பிரதேசத்தில் பெண் ஒருவர் தீயில் எரிந்த நிலையில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) சடலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கூளாவடியைச் சேர்ந்த 67 வயதுடைய இந்த பெண் 3 பிள்ளைகளின் தாய் ஆவார்.

இப்பெண்ணுக்கு நீரிழிவு நோயால் ஏற்பட்ட மன உளைச்சல் காரணமாக நேற்று பகல் வீட்டின் முற்றத்தில் தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்துக்கொண்டார் எனக' கூறப்படுகிறது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார், சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு கொண்டுசெல்வற்கானநீதிமன்றஅனுமதியை பெற நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இதுதொடர்பானமேலதிகவிசாரணைகளில் மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (05)

# எதிர்க்கட்சியை மாற்றுவோம் வசந்த முதலிகே பிரசாரம்



நடைபெறவுள்ளபொதுத்தேர்தலில்மக்கள் எழுச்சி கூட்டணியின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில் தலைமை வேட்பாளராக போட்டியிடும் வசந்த முதலிகே நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை நீர்கொழும்பு காமச்சோடை வாராந்த சந்தையில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

இதன்போது அவர் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்து மக்களுக்கு தமது கொள்கை பற்றி தெளிவுபடுத்தினார்.

'எதிர்க்கட்சியை மாற்றிடுவோம்' என்ற தொனிப்பொருளில் இவரது பிரசாரம் அமைந்திருந்தது.

அத்துடன் வசந்த முதலிகே நீர்கொழும்பு நகரின் பல பிரதேசங்களுக்கும் சென்று பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ்த் தேசியத்தை மலினப்படுத்தவே சூட்சுமமாக காய்நகர்த்துகிறது ஜே.வி.பி.

## அவைத் தலைவர் சிவஞானம் விசனம்



தமிழ் தேசியத்தை மலினப்படுத்துவதற்கு ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி சூட்சுமமாககாய்களைநகர்த்திவருகின்றது. அச்செயற்பாடு தமிழினத்தின் இருப்புக்குமிகப்பெரியஆபத்துஎன்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சிரேஷ்டதுணைத்தலைவர்அவைத் தலைவர் சிவஞானம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜே.வி.பி. 'அனைவரும் இலங்கையர்' என்ற அடையாளத்துக்குள் வர வேண்டுமென்ற கோசத்தை முன்னெடுப்பதானதுதமிழ்த்தேசியக் கோட்பாட்டை கரைப்பதையே அடிப்படைஇலக்காகக்கொண்டுள்ளது என்றும்அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜே.வி.பியானது தேசிய மக்கள் சக்தி என்ற போர்வையில் தற்போது ஆட்சியில் அமர்ந்திருக்கிறது. அந்தத் தரப்பு நாடாளுமன்றத்துக்கும் அதிகாரம் கோரி இப்போது தமிழ் மக்களை நோக்கி நகர ஆரம்பித்திருக்கிறது.

ஜே.வி.பியைபொறுத்தவரையில் அனைவரும்இலங்கையர்கள்என்ற அடையாளத்துக்குள் சங்கமிக்க வேண்டும்என்பதேகோரிக்கையாக உள்ளது.


தமிழ் மக்கள் தங்களுடைய தனித்துவத்தையும் இருப்பையும் அடையாளத்தையும் உறுதி செய்வதற்காகவே கடந்த ஏழு தசாப்தங்களாக போராடி வருகின்றார்கள்.

தமிழ்மக்களின்அபிலாஷைகள்இதுவரையில்பூர்த்தி செய்யப்படாதநிலைமையேகாணப்படுகிறது. அவர்களின் பிரச்சினைகளுக்குரிய தீர்வு வழங்கப்படவில்லை. ஜே.வி.பியிடம் அதுகுறித்த தெளிவான நிலைப்பாடு இல்லை.

அத்தகையதொரு நிலைமையில், தமிழர்களை ஜே.வி. பியின் இலங்கையர் என்ற அடையாளத்துக்குள் சங்கமிக்க வைக்கும் முயற்சியானது தமிழ்த் தேசியத்தை மலினப்படுத்துவதையே நோக்கமாக கொண்டிருக்கிறது.

ஆகவே, இந்த விடயத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தெளிவுற வேண்டியது அவசியமானது. மாற்றம் அவசியம் என்ற நிலைப் பாட்டில் தமிழ்த் தேசியத்தை பெருந்தேசியத்துக்குள் கரைக்கும் சூட்சுமமான நகர்வுகளுக்கு துணை போகக்கூடாது. அவ்விதமான நிலைமை ஏற்படுமாயின், தமிழினத்தின் இருப்புக்கே ஆபத்தாகிவிடும். - என்றார்.(05)

# நிமலராஜனுக்கு வவுனியாவிலும் 24 ஆம் ஆண்டு நினைவு தினம்






படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 24 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் சனிக்கிழமை அனுஸ்டிக்கப்பட்டது.

அமையத்தின் செயலாளர் ப.கார்த்தீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அன்னாரது திருவுருவ படத்திற்கு ஒளி தீபம் ஏற்றி மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. குறித்த நிகழ்வில் மாவட்டத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். (05-100)

# ரணில் பல சலுகைகளை கோரினார்; அவற்றை நான் நிராகரித்துவிட்டேன்

## என்கிறார் அநுர

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 163 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், 20 வாகனங்கள் உட்பட பல சலுகைகளை கோரினார். அவற்றை நிராகரித்துவிட்டேன் என ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி 163 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், 20 வாகனங்கள், 16 சமையல்காரர்கள் உட்பட பல சலுகைகளை கோரினார் என அநுர குமார திசாநாயக்க தங்காலையில் இடம்பெற்ற பொதுத்தேர்தல் பிரச்சார கூட்டமொன்றில் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையின் அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு மூன்று வாகனங்களேவழங்கப்படும்எனஅவர்தெரிவித்துள்ளார்.

அரசநிதியை முன்னாள் ஜனாதிபதிகளிற்கு பயன்படுத்துவதை தடுப்பதற்கான சட்டம் நிறைவேற்றப்படும்,என தெரிவித்துள்ள அனுர குமார திசநாயக்க ரணில் விக்கிரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷ வீடுகளில் இரண்டு அம்புலன்ஸ்கள் எந்நேரமும் தயாரான நிலையில் உள்ளன இவற்றை தனிப்பட்ட சொத்தாக பயன்படுத்தக்கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# ராஜபக்சவின் சித்தாந்தத்தை ஜே.வி.பி. கைவிடவேண்டும்

## மு.கா. தலைவர் ஹக்கீம் கோரிக்கை



அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம், அதிகாரப்பகிர்வு தொடர்பில் ஜே.வி.பி.யினர் ராஜபக்சக்களின் சித்தாந்தத்தை பின்பற்றுவதை முழுமையாகக் கைவிடவேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் கண்டி மாவட்ட முதன்மை வேட்பாளருமான ரவூப் ஹக்கீம் பகிரங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா, அதிகாரப்பகிர்வு, 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக வெளியிட்டுள்ள கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜே.வி.பியினர் மார்க்சிச இடதுசாரித்துவக் கொள்கையைக் கொண்டவர்கள். அவர்கள் இரண்டு கிளர்ச்சிகளைச் செய்ததன் பின்னர் மீண்டும் ஜனநாயக வழிக்கு வந்தார்கள். அதன் பின்னர் இந்திய, இலங்கை ஒப்பந்தத்துக்கு13ஆவதுதிருத்தச்சட்டத்துக்குஎதிர்ப்பினை வெளியிட்டுப் போராடினார்கள்.

பின்னர் அவற்றையெல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு, மாகாண சபைகளுக்கான தேர்தலில் பங்கேற்று உறுப்புரிமைகளையும் பெற்றுக்கொண்டார்கள். இந்தச் செயற்பாடானது அவர்களின் முற்போக்கான வரவேற்கக்கூடியதொரு பிரதிபலிப்பாகக் காணப்பட்டது.

அதுமட்டுமன்றி நிறைவடைந்த ஜனாதிபதி தேர்தலில் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர், மாகாண சபை முறைமையை அமுலாக்கப்போவதாகவே அறிவித்திருந்தனர்.

இருப்பினும் தற்போது அவர்கள் 13ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிரான நிலைப்பாடுகளையும், அதிகாரப்பகிர்வுஅவசியமில்லை என்ற தோற்றப்பாட்டிலும் கருத்துக்களைபகிர்ந்துள்ளார்கள்.

உண்மையில், அதிகாரப்பகிர்வுதேவையில்லை, அபிவிருத்தி தான் அவசியம் என்பது ராஜபக்ஷக்களின் சித்தாந்தம். அந்த சித்தாந்தம் ஜே.வி.பிக்குள் தற்போது எட்டிப்பார்க்கிறது.

தற்போது நாட்டின் அனைத்து மக்களும் ஐக்கிய இலங்கைக்குள் வாழவேண்டும் என்பதை தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்கள். இவ்வாறான நிலையில் அந்தந்த இனங்களுக்குரியதனித்துவம்பாதுகாக்கப்பட்டு சுயாட்சி அளிக்கப்பட வேண்டும்.

தங்களைத் தாங்களே ஆளுகின்ற வகையில் அதிகாரங்கள்பகிரப்படவேண்டும். அதன்மூலமாகத்தான் நாட்டில்உள்ள இனங்களுக்கு இடையிலான நீண்டகால முரண்பாடுகளுக்கு தீர்வினை எட்ட முடியும்.

ஆகவே, ஜே.வி.பி. அதிகாரப்பகிர்வு சம்பந்தமான தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும். அவர்கள் மாற்றத்தினை ஏற்படுத்துவதாக இருந்தால் முதலில் அவர்களின் கொள்கையில் மாற்றம் ஏற்படுவது அவசியமாகும். அதிகாரங்கள் பகிரப்படாமல் உண்மையான மாற்றத்தினை அடைவது கடினமான காரியமாகும்.

அதுமட்டுமன்றி, அவர்கள் முன்னுக்குப் பின்னாக தமதுகொள்கைகளைமாற்றிமாற்றிவெளிப்படுத்துவதை தவிர்க்க வேண்டும். தங்களுடைய நிலைப்பாட்டை தெளிவாகக் கூற வேண்டியது அவசியமாகிறது. - என்றார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சி மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரால் பெண்கள் சிறுவர் விசாரணை பிரிவு திறந்துவைப்பு

கிளிநொச்சி பொலீஸ் நிலையத்தில் பிரதி பொலிஸ்மா அதிபரால் சனிக்கிழமை பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான விசாரணை பிரிவு சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.







இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் செயலர் எஸ் முரளிதரன், கிளிநொச்சி முல்லைதீவு மாவட்டங்களுக்கான பிரதி பொலீஸ் அத்தியட்சகர் ஆகியோர் கலந்து கொண்டனர். (05 - 113)

# பிரதிப் பொலீஸ் மா அதிபர் கிளிநொச்சிக்கு வருகை



நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாகப்பதில்பொலிஸ்மாஅதிபர் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தலைமையில் கிளிநொச்சி முல்லைத்தீவு பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும்கிளிநொச்சிமற்றும்முல்லைத் தீவு மாவட்ட அரசாங்க அதிபர் கள், இரண்டு மாவட்டங்களின் உதவித்தேர்தல் ஆணையாளருக் குமிடையிலான சந்திப்பு கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது எதிர்வரும் மாதம் நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தல்தொடர்பான பல்வேறு விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன. (05-113)

# காரைதீவில் களைகட்டியது மாதர் உற்பத்தி கண்காட்சி





(வி.ரி.சகாதேவராஜா)

தொழில் முயற்சிகளுக்கு பெண்களை வலுவூட்டல் எனும் தொனிப்பொருளின் கீழ், மாதர் உற்பத்தி செய்த பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் காரைதீவில் இடம் பெற்றது.

காரைதீவுப் பிரதேச செயலாளர் கோ.அருணனின் தலைமையில் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவஞானம் ஜெகராஜன் கலந்து சிறப்பித்தார்.

அங்கு மாதர் அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தினரால் உற்பத்திசெய்த பொருட்களை காட்சிப் படுத்தி, விற்பனையும் செய்யப்பட்டது.

இதன் போது காரைதீவு பிரதேச மாதர் சங்கங்களினால்முன்னாள்பிரதேசசெயலாளரும் தற்போதைய மாவட்ட மேலதிகச் செயலர் சிவ.ஜெகராஜன் மற்றும் சிறப்பாக பயிற்சிகளை முடித்த மாணவர்கள் அதன் ஆசிரியர் மற்றும் மாதர் அபிவிருத்தி சங்க தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர்கள் கௌரவப்படுத்தி பாராட்டப்பட்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.10.2024இல் வெளியிடப்பெற்றது